Since the Taliban's return to power in Afghanistan in 2021, women's political and social rights have been systematically and ideologically curtailed. This research critically examines how the Taliban's political thinking, rooted in extremist interpretations of religion, has been used as a tool to suppress women's rights and limit their freedom of expression. Drawing on the lived experiences of Afghan women now residing in Iran, this study uses a qualitative grounded theory methodology to uncover the causal, contextual, and mediating conditions that shape the Taliban's gender policies. Using content analysis of 12 in-depth interviews with Afghan women who lived under former Taliban rule, the study identifies themes such as fear of female education, cultural justifications for gender inequality, lack of international accountability, and the Taliban's use of religion to control and isolate women. The findings also reveal the silence of the international community and domestic political maturity as key enablers of gender-based repression. The research argues that the Taliban's gender ideology is not simply religious; it is political, designed to limit dissent, control social order, and negotiate with international stakeholders. The study calls for a reassessment of the globally passive international response and urges the integration of lived experience into policymaking. A grounded theoretical model is proposed to map the dynamics of gender-based oppression and guide future interventions. This research contributes to the understanding of authoritarian gender politics, the misuse of religious principles in governance, and the importance of global cooperation in protecting women's human rights.

Keywords: Gendered Oppression, Political Islam, Women's Rights, Freedom of Expression, Grounded Theory.

The role of gender equality in the Career development of married women : Explanatory Research study focusing on the Alaiyadivempu Divisional Secretariat Division.

P.Rega[1], T.Tharshan[2],
Department of Social Work, National Institute of Social Development, Sri Lanka
ammugunth@gmail.com[1] & thavarasatharshan@gmail.com[2]

Abstarct
Gender equality is widely recognized as essential for social progress, economic development, and the promotion of democratic values. Although married women are expected to contribute economically to their households, limitations in social freedom, lack of family support, and cultural restrictions often impede their career advancement. Consequently, even when married women are employed in government sectors, factors such as childcare responsibilities, household roles, workplace gender segregation, and gender-related challenges can lead to restricted opportunities for skill development, difficulties in obtaining promotions, limitations in undertaking additional work hours, and challenges in pursuing higher education. The primary objective of this study is to examine the role of gender equality in the career empowerment of married women working in the government sector. A mixed-method research design was employed for this investigation. Using a simple random sampling technique, 25 married Tamil women were selected, and data were collected through a structured questionnaire. Additionally, key informant interviews were conducted with eight individuals, including family members, colleagues, and representatives of community-based organizations. Quantitative data were analyzed using statistical methods, while qualitative data were subjected to thematic analysis. Findings indicate that although married women possess an understanding of gender equality, they are often hesitant to implement it in their personal and professional lives. Factors such as the imbalance between work and family responsibilities, inappropriate allocation of tasks, and limited opportunities to participate in promotion competitions significantly contribute to job dissatisfaction among women. Therefore, to enhance the career advancement of married women, integrated career development interventions should be implemented at multiple levels. Future research may focus on evaluating the effectiveness of gender equality–focused career interventions in facilitating the career empowerment of married women.

Key words : Married Women, Government Sector, Career Empowerment, Role of Gender

Invisible Struggles: Discrimination Against Transwomen in Sri Lanka

Pitiyage Ishara Shani[1], *W.C.N. Alwis*[2]
Department of Social Work, National Institute of Social Development, Sri Lanka
Pitiyageisharashani@gmail.com

Abstract
A transwoman is a person who was assigned male at birth but identifies and lives as a woman. This study explores the multifaceted discrimination experienced by transwomen in Sri Lanka, focusing on their lived experiences across social, cultural, legal, and institutional spheres. Despite increasing global attention to gender diversity and rights, transwomen in Sri Lanka remain marginalized, facing persistent stigma, exclusion, and violence. This research aims to understand the nature, prevalence, and impact of discrimination against transwomen and how it affects their mental health, access to services, employment, and personal identity. A qualitative methodology was employed, utilizing snowball sampling to identify and interview transwomen who have experienced discrimination. This sampling method was instrumental in gaining access to participants within a highly stigmatized and often hidden population. In-depth, semi-structured interviews were conducted with transwomen from various regions, focusing on their daily realities, coping mechanisms, and interactions with social institutions such as healthcare, law enforcement, education, and employment. Preliminary findings indicate that transwomen in Sri Lanka face systemic barriers rooted in gender norms, legal invisibility, and cultural taboos. Participants reported high levels of emotional distress, social rejection, and limited opportunities for economic advancement. Institutional responses were often inadequate or hostile, reinforcing cycles of marginalization.
Keywords: Transwomen, Discrimination, Sri Lanka, Marginalization

உளநலத்தில் பாலின வேறுபாடுகள்: ஓர் ஒப்பீட்டாய்வு

எம். புஷ்பா[1], எம்.எப்.என். ஹிஸாதா[2], ஏ.எச்.எப். ஹப்ஸா[3]

கலை, கலாசார பீடம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

mohanpushpa27@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

தனிநபர்களின் மனநலத்தை வடிவமைப்பதில் பாலினம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இது பல்வேறு உளவியல் கோளாறுகளின் பரவல், வெளிப்படும் விதம் மற்றும் அதனது போக்கை பாதிக்கின்றது. ஒட்டுமொத்த மனநல கோளாறுகளின் விகிதங்கள் பாலினத்திற்கு இடையே சிறு வேறுபாடுகளைக் காட்டினாலும், குறிப்பிட்ட நிலைமைகளின் பரவல், உதவி தேடும் நடத்தைகள் மற்றும் அடிப்படைக் காரணிகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் வெளிப்படுகின்றன. மனநலத்தில் உள்ள இந்த பன்முக பாலின வேறுபாடுகள் பற்றிய தற்போதைய நிலைப்பாட்டினை இவ்வாய்வு முன்வைக்கின்றது. குறிப்பாக பெண்களிடம் மனச்சோர்வு, பதட்டக் கோளாறுகள் மற்றும் உண்ணும் கோளாறுகள் போன்ற கோளாறுகள் கண்டறியப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். மாறாக ஆண்களிடம் பொருள் பயன்பாட்டுக் கோளாறுகள் மற்றும் சமூக விரோத ஆளுமைக் கோளாறு போன்ற கோளாறுகளின் பரவல் விகிதம் அதிகமாகும். பெண்கள் தற்கொலைக்கு முயற்சிக்கும் விகிதம் அதிகமாக இருந்தாலும், ஆண்கள் தற்கொலையால் இறக்கும் விகிதம் அதிகமாக உள்ளது. மேலும் உதவி நாடும் நடவடிக்கைகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன, பொதுவாக பெண்கள் தொழில்முறை மனநல சிகிச்சையை நாட அதிக ஆர்வம் காட்டுவதுடன் ஆண்கள் மனஉறுதியை வலியுறுத்தும் சமூக நெறிமுறைகள் காரணமாக உதவி தேடுவதில் விருப்பமற்றவர்களாக அல்லது தவிர்ப்பர்களாக உள்ளனர். இவ்வேறுபாடுகள் ஹார்மோன்களின் சமநிலையின்மை, மரபணுக்கள் போன்ற உயிரியல் காரணிகள், பாலினம், வன்முறைக்கு ஆளாகுதல், பராமரிப்புச் சுமை, சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்ற உளவியல் காரணிகள் மற்றும் களங்கம், பாரம்பரிய ஆண்மை அல்லது பெண்மை நெறிகள் போன்ற கலாச்சார காரணிகள் ஆகியவற்றினால் பாதிக்கப்படுகின்றன. இது பற்றிய தெளிவை இவ்வாய்வு ஏற்படுத்த முயன்றுள்ளது. இவ்வாய்வு தலைப்புடன் தொடர்புடைய முன்னைய ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகள் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளதுடன் இது இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாக கொண்ட ஓர் ஒப்பீட்டு ஆய்வாகும்.

திறவு சொற்கள்: உளநலம், உணர்ச்சி அடக்கமுறை, பாலினம், பாலின விதிமுறைகள், மனநலக் கோளாறுகள்

பாலினத்தின் சமூகக்கட்டமைப்பு – ஓர் பகுப்பாய்வு

எம்.எப்.என். ஹிஸாதா[1], ஏ.எச்.எப். ஹப்ஸா[2], எம். புஷ்பா[3]

கலை, கலாசார பீடம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

noorulhisadha887@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பாலினம் என்பது ஒருவரின் உயிரியல் இயல்புகளைத் தாண்டி,சமூகத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு கருத்தாகும். ஆண், பெண் இயல்புகளைப் பற்றிய நமது கருத்தாக்கங்களை சமுதாயத்தால் வரலாற்றின் போக்கில் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளும் எதிர்பார்ப்புக்களுமே தீர்மானிக்கின்றன. இவ் எதிர்பார்ப்புக்கள் மற்றும் விதிகளின் முக்கியத்துவத்தை எவரும் மறுப்பதில்லை. எனவே, விதிக்கப்பட்ட வரைமுறைகளிற்கு உட்படாத அனுபவங்கள் பொருத்தமற்றவையாக, நியாயப்படுதப்பட வேண்டியவையாகவே கருதப்படுகின்றன. எல்லா சமூகங்களிலும் இத்தகைய வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் கூடவோ குறையவோ இருக்கவே செய்கின்றன. இவை காலமாற்றத்திற்கேற்ப மாறக்கூடியவையாகக் காணப்படுகின்றன. வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் முக்கியத்துவத்தோடு பார்க்கப்பட்ட ஓர் விதிமுறை இன்னொரு கட்டத்தில் அதன் முக்கியத்துவத்தை இழக்கலாம். அதேநேரம் ஒரே சமுதாயத்தில் கூட வேறுபட்ட பல எதிர்பார்ப்புக்கள் நிலவலாம். வரலாற்றுக் காலகட்டங்கள் முழுவதும் ஆண்மை, பெண்மை குறித்து வழங்கப்பட்டு வந்த விளக்கங்கள் மனிதர்கள் தம்மைப் பற்றி உருவாக்கிக் கொண்ட கருத்தியல் மற்றும் அரசியல் நிலைப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்றதாக அமைந்துள்ளமையால் இது மனிதர்களின் சிந்தனைப் போக்கின் ஒரு பகுதியேயாகும். ஆணும் பெண்ணும் எப்படி சமமாக முடியும்? ஆண் செய்யும் வேலைகளைப் பெண்ணும், பெண் செய்யும் வேலைகளை ஆணும் செய்ய முடியுமா? ஒரு பெண்ணின் வாழ்க்கை அனுபவமும் ஒரு ஆணின் வாழ்க்கை அனுபவமும் வேறுபட்டவை, ஒரு பெண்ணின் குணாதிசயங்களும் ஒரு ஆணின் குணாதிசயங்களும் வேறுபட்டவை என எண்ணிலடங்கா வேறுபாடுகளை வைத்துக் கொண்டு ஆணும் பெண்ணும் சமமாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கலாமா? இயற்கை நம்மை வெவ்வேறாக உருவாக்கியிருக்கும்போது அதனை மாற்ற முடியாது தானே. இவ்வாறு பல கேள்விகள் எழுகின்ற போதிலும் ஆணும் பெண்ணும் உடல்ரீதியாக வேறுபட்டிருப்பதனால் அனைத்து விடயங்களிலும் வேறுபட்டிருப்பதாக அர்த்தம் கொள்ள முடியாது. மாறாக, சமுதாயம் தான் ஆணுக்கும் பெண்ணிற்குமான வேறுபட்ட குணாம்சங்களையும் வித்தியாசமான போக்குகளையும் வரையறுத்துள்ளது. ஆணும் பெண்ணும் உடல் ரீதியாக வேறுபாடுகளைக் கொண்டிருப்பது போலவே, சமூகத்தில் அவர்கள் வகிக்கும் பாத்திரத்திலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றது. ஆனால் இருவரின் வேறுபாடுகளும் ஒன்றையொன்று நிறைவு செய்வதாய் அமைவதனை இவ்வாய்வானது விவாதிக்க முயல்கின்றது.

திறவுச் சொற்கள்: பாலினம்,ஆண்மை,பெண்மை

தலைப்பு: பால்நிலை மற்றும் கல்வி- இரத்தினபுரி மாவட்டம் பெட்டிகல கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

விஷ்வநாதன் பபானி

சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

இந்த ஆய்வு இரத்தினபுரி மாவட்டத்தின் பெட்டிகல கிராமத்தில் பால்நிலை மற்றும் கல்வி இடையேயான உறவை ஆராய்வதற்காக மேற்கொள்ளப்பட்டது. கல்வி, சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றத்திற்கான அடித்தளமாக கருதப்படுகின்றது. ஆனால் பால்நிலை சார்ந்த அநீதி மற்றும் சமநிலை இல்லாமை ,கல்வி வாய்ப்புகளை பாதிக்கும் முக்கிய காரணிகள் ஆகவே தொடர்ந்து காணப்படுகின்றன.

ஆய்வின் முறைமைகள் தரமான முறையில் அமைந்துள்ளன. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் கிராம தலைவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மற்றும் சில புத்தக ஆதாரங்களும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அதன் அடிப்படையில் பெண்கள் கல்வியில் முன்னேற்றம் காணினும் குடும்ப பொறுப்புக்கள், பொருளாதார சிக்கல்கள் மற்றும் சமூக அழுத்தங்கள் காரணமாக அவர்களின் கல்வி இடைநிறுத்தப்படுகிறது என்பது தெரிய வந்தது. மறுபுறம் ஆண்கள் உடனடி வருமானம் தரக்கூடிய வேலைகளை முன்னுரிமை தருவதாக கண்டறியப்பட்டது.

மேலும் ஆசிரியர்களின் அணுகுமுறை, பாடசாலை சூழல் மற்றும் சமூக கருத்துக்கள் மாணவர்களின் கல்விச்செயல்பாட்டில் முக்கிய பங்காற்றுகின்றன. இதனால் பால்நிலை உணர்வுடன் கூடிய கல்விக் கொள்கைகள் விழிப்புணர்வு முயற்சிகள் மற்றும் அரசு அரசு அல்லாத அமைப்புகளின் பங்களிப்பு அவசியம் என ஆய்வு வலியுறுத்துகிறது.

தீர்மானமாக கல்வி என்பது பால் நிலையை தாண்டிய அனைவருக்கும் சமமான அடிப்படை உரிமை என்பதை ஆய்வு வலியுறுத்துகிறது. பெட்டிகல கிராமத்தின் அனுபவங்கள் தேசிய மட்ட கொள்கைகளுக்கு பயனுள்ளதாக அமையலாம்.

திறவுச் சொற்கள்: பால்நிலை கல்வி சமநிலை இல்லாமை கிராமப்புறம் பெட்டிக்கல கிராமம் இரத்தினபுரி மாவட்டம்

பணியிடங்களில் பெண் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள் - உடல் ரீதியாக அங்கவீனமுற்றவர்களை மையப்படுத்திய மருதமுனை பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு

[1]மு.இ.மு. இஸ்பாக், [2]வ. ஜெயரூபன்
சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை
isfak99@gmail.com[1]

ஆய்வுச் சுருக்கம் (Abstract)

இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு, பெண்களின் பங்களிப்பு இன்றியமையாதது. இதில், பெண் மாற்றுத்திறனாளிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி, தற்சார்புடன் வாழவும், சமூகத்தில் மரியாதையுடன் பங்கேற்கவும் வேலைவாய்ப்பு ஒரு முக்கிய கருவியாக உள்ளது. இருப்பினும், கிழக்கு மாகாணத்தின் மருதமுனை பிராந்தியத்தில் உள்ள பெண் மாற்றுத்திறனாளிகள், வேலைவாய்ப்பின் போது பல தனித்துவமான தடைகளை எதிர்கொள்கின்றனர். இந்த ஆய்வு, அவர்களின் பணியிட அனுபவங்கள், அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அதற்கான பயனுள்ள தீர்வுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஆய்விற்கான தரவுகள், வினாக்கொத்து, நேர்காணல்கள் மற்றும் கள ஆய்வுகளின் மூலம் சேகரிக்கப்பட்டன. இதில், பெண்களின் பணியிட மனப்பான்மை, உடல் சார்ந்த மற்றும் தொழில்நுட்ப வசதிகளின் அணுகல், மற்றும் பாலினம் சார்ந்த கொள்கை நடைமுறைகள் போன்ற முக்கிய அம்சங்கள் விரிவாக ஆராயப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளிவிவர பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

இந்த ஆய்வு, பெண் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பில் ஈடுபடும் போது, எதிர்மறையான சமூக மனப்பான்மை, உடலியல் ரீதியான அணுகல் வசதிகளின் பற்றாக்குறை மற்றும் பலவீனமான கொள்கை நடைமுறைகள் போன்றவற்றை எதிர்கொள்கின்றனர் என்பதைக் கண்டறிந்தது. குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில், பெண் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறந்த வேலைவாய்ப்பு மாதிரிகள் இல்லாமலிருப்பது அவர்களின் தொழில் வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது. இந்த நிறுவனங்களில், பாலினம் மற்றும் இயலாமைகள் சார்ந்த பாரபட்சம் காரணமாக, அவர்களுக்கு குறிப்பிட்ட ஒருசில வேலைவாய்ப்புக்களில் மட்டுமே வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இதனால், அவர்களின் திறன்களுக்கு ஏற்ற வேலைகள் கிடைப்பதில்லை.

இந்த ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில், மருதமுனை பிராந்தியத்தில் உள்ள பெண் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்தியேகமான மற்றும் குறைந்த செலவில் நடைமுறைக்கு உகந்த ஒரு உள்ளடங்கிய வேலைவாய்ப்பு மாதிரியை உருவாக்குவதற்கான சில பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. இந்த மாதிரி, பணியிடங்களில் பாலினம் மற்றும் குறைபாடு தொடர்பான பாரபட்சங்களை குறைத்து, பெண் மாற்றுத்திறனாளிகளின் திறன்களை முழுமையாக பயன்படுத்த உதவும்.

திறவுச் சொற்கள்: பெண் மாற்றுத்திறனாளிகள், வேலைவாய்ப்பு, பணியிட சவால்கள், மருதமுனை, பாலினம் சார்ந்த பாரபட்சம், அணுகல் வசதிகள்.

காலநிலை மாற்றமும் பொருளாதார சவால்களும் - வெலிக்கந்த பிரதேசத்திலுள்ள நெற்பயிர்செய்கை நடவடிக்கையிலிருந்து முழுமையாக விலகியவர்களை மையப்படுத்திய ஆய்வு

யு.ஜிசாந்தினி [1], வ. ஜெயரூபன் [2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

yjishanthini@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயம் மிகவும் அடிப்படையான துறையாக காணப்படுகிறது. குறிப்பாக நெற்பயிர்செய்கை மக்களின் உணவுப் பாதுகாப்பிற்கும், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கும் முக்கிய பங்காற்றுகிறது. ஆனால் கடந்த சில தசாப்தங்களாக காலநிலை மாற்றமும் அதனுடன் தொடர்புடைய பொருளாதாரச் சவால்களும் விவசாயத் துறையை கடுமையாக பாதித்துள்ளன. வெலிகந்த பிரதேசம் நீர்பாசன வசதிகளும் உழவுத் திறனும் காரணமாக முன்னைய காலங்களில் நெற்பயிர்செய்கையில் முன்னிலை பெற்றிருந்தாலும், தற்போது பல நெற்பயிர்செய்கையாளர்கள் முழுமையாக இந்தத் தொழிலிலிருந்து விலகியுள்ளனர். அவர்களின் விலகலுக்குப் பின்னால் உள்ள காரணிகளை ஆராய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

இவ்வாய்வு அளவுரீதியான ஆய்வுமுறை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. வெலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த,முத்துக்கல், கறப்பளை, அலின்சுபொத்தன கிரமாங்களிலுள்ள நெற்பயிர்செய்கையை முழுமையாக கைவிட்ட 110 நெற்பயிர்செய்கையாளர்கள் எளிய எழுமாற்று மாதிரி தேர்வு முறையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தரவுச் சேகரிப்பிற்காக வடிவமைக்கப்பட்ட வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. இதில் காலநிலைச் சவால்கள், பொருளாதாரச் சவால்கள், வாழ்வாதார மாற்றங்கள், குடும்ப அமைப்பின் தாக்கங்கள் போன்ற அம்சங்கள் இடம்பெற்றன. சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரண புள்ளிவிபரங்கள், சதவீத பகுப்பாய்வு, மற்றும் காரணி பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டன.

ஆய்வின் முடிவுகள் காலநிலை மாற்றமும் பொருளாதாரச் சவால்களும் நெற்பயிர்செய்கையாளர்களின் தொழில்விலகலுக்கு நேரடியாக காரணமாக உள்ளன என்பதை வலியுறுத்துகின்றன. குறிப்பாக காலநிலை மாற்றம் உற்பத்தி நிலைத்தன்மையை பாதிக்க, பொருளாதாரச் சவால்கள் நிதிச் சுமையை அதிகரித்தன. அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் உதவிகள் போதுமானதாக இல்லை என்பதையும், சந்தை விலை நிலைத்தன்மையின்மை விவசாயிகளை மேலும் பாதித்ததையும் ஆய்வு வெளிப்படுத்துகிறது.

திறவுச் சொற்கள் : காலநிலை மாற்றம் , நெற்பயிர்செய்கை ,பொருளாதார சவால்கள்

காலநிலைக் காரணிகளின் செல்வாக்கும் பெண் கால்நடை வளர்ப்பாளர்களின் மீது அதன் பொருளாதார தாக்கமும் (திருக்கோவில் பிரதேசத்திற்கு உட்பட்ட பெண் கால்நடை வளர்ப்பாளர்களை மையப்படுத்திய ஆய்வு)

சு.சீனுஜா[1], வ.ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

seenuja65@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இவ் உலகம் எதிர்கொள்கின்ற முக்கியமான சூழலியல் சவால்களில் காலநிலை மாற்றம் பிரதானமாகத் திகழ்கின்றது. குறிப்பாக வெப்பநிலை உயர்வு, வெள்ளம், வரட்சி, மழையின்மை போன்றவை கால்நடை வளர்ப்புத் துறையில் நேரடியான மற்றும் மறைமுகமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாக திருக்கோவில் பிரதேசத்திற்கு உட்பட்ட குறைந்த வருமானம் பெறும் பெண் கால்நடை வளர்ப்பார்கள் நேரடியாக காலநிலை மாற்றம் காரணமாக எதிர்கொள்ளும் பொருளாதார ரீதியான சவால்களைப் புரிந்து கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. இவ் அளவு ரீதியான ஆய்விற்கான தரவுகள் மாதிரி எடுப்பு, வினாக் கொத்து, நேர்காணல் மற்றும் நேரடி அவதானிப்பு மூலமாக சேகரிக்கப்பட்டன.

பால்நிலை சார்ந்த காரணிகளின் செல்வாக்கு மற்றும் காலநிலைக் காரணிகளின் செல்வாக்கினால் பெண் கால்நடை வளர்ப்பார்கள் தீவனச் செலவு,கால்நடை மருத்துவச் செலவு, தொழில்நுட்ப ஆதரவு பற்றாக்குறை, சந்தை பாதுகாப்பு இல்லாமை மற்றும் மாடுகளில் உற்பத்தித்திறன் குறைவடைதல் போன்றவற்றினால் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். மேலும் பெண் கால்நடை வளர்ப்பாளர்கள் நேரடியாக எதிர்நோக்கும் வருமானக் குறைபாடு, நிவாரண வசதிகளின் பற்றாக்குறை மற்றும் அரசினால் வழங்கப்படும் ஆதரவுகள் குறைவு என்பனவும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றன. இதனால் கால்நடை வளர்ப்பை ஒரு நிலையான துறையாக மாற்றுவதற்கு காலநிலை மாற்றத்திற்கு எதிரான கால்நடை வளர்ப்பு முறைகள், பயிற்சிகள்,புதிய தொழிநுட்பங்கள், நிதிசார்ந்த உதவிகள் மற்றும் அரசியல் உதவித் திட்டங்கள் அவசியம் என்பதை இவ் ஆய்வானது வெளிப்படுத்துகின்றது.

திறவுச் சொற்கள் - கால்நடை வளர்ப்பு, பொருளாதார தாக்கம், பெண் கால்நடை, வளர்ப்பாளர்கள், காலநிலை மாற்றம்

பெண் தலைமைதத்துவ குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார சவால்கள் (கணவனை இழந்த 60 வயதிற்க்கு மேற்பட்ட களுவேன்கேணி கிராமத்தில் உள்ள பெண் தலைமைதத்துவ குடும்பங்களை மையப்படுத்திய ஆய்வு)

ஜோசப் நாகராஜினி[1],வ.ஜெயரூபன் [2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

raajir523@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

உலகளாவிய ரீதியில் இன்று பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்துச் செல்வது முக்கிய ஒரு சமூகச் சவாலாக மாறி உள்ளது. இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவேன்கேணி கிராமத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகின்றது. பொதுவாக ஆய்வில் பெண்கள் குடும்பத்திற்குத் தலைமை தாங்குவது என்பது பல காரணிகளின் நிமிர்த்தம் ஏற்படக் கூடியதாக இருப்பினும் இங்கு கணவனின் இறப்பின் விளைவாக உருவாகிய குடும்பங்கள் மட்டுமே இவ்வாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இக்குடும்பங்களின் பொருளாதார நிலை குறித்தும், இக்குடும்பப் பெண்கள் பொருளாதார ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், இக்குடும்பங்களை முன்னேற்றுவதற்கு எவ்வாறான திட்டங்களை முன் வைக்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்வதும், பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளை முன் வைப்பதும் இவ் ஆய்வின் நோக்கங்களாக உள்ளன.

ஆய்வுக்கான தரவுகள் எளிய எழுமாற்று மாதிரியைப் பயன்படுத்தி வினாக்கொத்து, கலந்துரையாடல், பங்குபற்றி அவதானம், நேர்காணல் ஊடாக தரவுகள் சேகரிக்கப்படவுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் அளவு ரீதியான முறைகளின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்படவுள்ளது.

தற்கால சூழலில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்த நிலையில் அவர்கள் முகங்கொடுக்கும் சமூக, பொருளாதார பிரச்சினைகள் பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை. பெண் தனித்து தனது குடும்பத்தினை நடாத்தும் போது ஏற்படும். பிரச்சினைகளும், அதன் மூலம் அப்பெண்ணுக்கு ஏற்படும் நேரடியான பாதிப்புக்களும் அவர்களை சார்ந்து இருக்கின்ற குடும்ப உறுப்பினர்களும் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகின்றனர். இவ் நிலையே களுவேன்கேணி கிராமத்தின் பெண் தலைமைத்துவ குடும்பத்தின் மத்தியில் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இவர்களின் பிரச்சினைகள் பெரும்பாலானவை சமூகத்தில் ஓரங்கட்டப்படுகின்ற தன்மையும் சமூக அந்தஸ்து கிடைக்காத நிலையும் இப் பெண் தலைமைத்துவ குடும்பத்தின் மத்தியில் அதிகளவு காணப்படுகின்றது. அதேபோல பொருளாதார ரீதியான பிரச்சினையாக வேலையின்மை மற்றும் முறைசாரா தொழில் வாய்ப்புக்களில் அதிகளாவான பாலியல் நிலையும் தன்மை போன்றவையும் அதனால் கடன் பெறல், பிறரில் தங்கிவாழ்கின்ற நிலை காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

திறவுச் சொற்கள்:- பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள், பொருளாதார சவால்கள்

சமுர்த்தி கொடுப்பணவு இடைநிறுத்தப்பட்ட பெண்தலைமைக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார சவால்கள் மாந்தை மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட ஆட்காட்டிவெளி கிராமம் சார்பான ஆய்வு

J. தனுஜன்[1],வ.ஜெயரூபன் [2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் வறுமைக் குறைப்பு முக்கிய திட்டமான சமுர்த்தி நலத்திட்டத்தில் இருந்து பல பெண்தலைமைக் குடும்பங்கள் பல்வேறு காரணங்களால் நீக்கப்பட்டு வருகின்றன.
இத்திட்டத்தில் இருந்து நீக்கப்படுதல் அல்லது கொடுப்பனவு இடைநிறுத்தப்படுதல், இக்குடும்பங்களின் வாழ்க்கையில் கடுமையான பொருளாதார மற்றும் சமூக பின்னடைவுகளை ஏற்படுத்துகிறது. இந்த ஆய்வு, மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஆட்காட்டிவெளி கிராமத்தில் சமுர்த்தி கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்ட பெண்தலைமைக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வாழ்க்கையின் முதன்மை ஆதாரமாக விளங்குகிறது. கணவன் இழப்பு, விவாகரத்து, அல்லது குடும்பப் பொறுப்புகளை தனியாகச் சுமக்கும் பெண்களுக்கு இக் கொடுப்பனவு அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற உதவுகிறது. பெரும்பாலானோர் இந்த கொடுப்பனவு உணவுப் பொருட்கள் வாங்குவதற்கே அதிகமாக பயன்படுத்துகின்றனர். அதோடு குழந்தைகளின் கல்விச் செலவுகள், குறிப்பாக புத்தகங்கள், சீருடைகள், போக்குவரத்து முதலியனக்காகவும் ஒதுக்கப்படுகிறது. சில குடும்பங்கள் சுகாதாரத் தேவைகள், மருந்துகள் வாங்குதல், வீட்டு மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களுக்கு பயன்படுத்துகின்றன. மேலும், கடன் திருப்பிச் செலுத்தல் மற்றும் மத, குடும்ப நிகழ்ச்சிகளுக்கும் இந்நிதி செலவிடப்படுகிறது. இதன் மூலம், சமுர்த்தி கொடுப்பனவு பெண்தலைமைத்துவ குடும்பங்களின் அடிப்படை வாழ்வாதாரத்தையும் சமூகத் தேவைகளையும் தாங்கும் முக்கிய கருவியாக விளங்குகிறது

குறிப்பிட்டு, இந்த ஆய்வு சமுர்த்தி உதவி இடைநிறுத்தம் தொடர்பான காரணிகள், அத்தகைய
இடைநிறுத்தம் காரணமாக எழும் பொருளாதார சிரமங்கள் (உணவுப் பாதுகாப்பின்மை, வருமான இழப்பு, கடன் சுமை) மற்றும் அதன் சமூகத் தாக்கங்கள் (கல்வி, சமூக ஒதுக்கீடு) ஆகியவற்றை ஆராய்கிறது.இந்த ஆய்வு, கலந்தாய்வு நுட்பங்கள் குழு விவாதங்கள் மற்றும் கண்காணிப்பு உள்ளிட்ட தரமான ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தி முதன்மைத் தரவைச் சேகரிக்கும். இரண்டாம் நிலைத் தரவுகள் அரசாங்க ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய இலக்கியங்களிலிருந்து பெறப்படும். ஆய்வின் முடிவுகள், இத்தகைய குடும்பங்களின் கடினமான நிலைமைகளை எடுத்துக்காட்டுவதோடு, சமுர்த்தி திட்டத்தை மிகவும் பலவீனமான குழுக்களை ஆதரிக்கும் வகையில் மறுவடிவமைப்பதற்கான கொள்கை பரிந்துரைகளை வழங்கும்.

திறவுச் சொற்கள்:- சமுர்த்தி நலன்திட்டம்,பெண்தலைமைத்துவ குடும்பங்கள்,பொருளாதார சவால்கள்

சமகாலத்தில் சமூக அபிவிருத்தியில் பெண்களின் கல்வி ரீதியான பங்களிப்பு ஏறாவூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

ஏ.எம். அஸீம்1, எப்.ஏ. ஆயிஷா, வ.ஜெயரூபன் [2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

amazeemevr16456@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வு, இலங்கையின் சமூக அபிவிருத்தியில் பெண்களின் கல்வி ரீதியான பங்களிப்பை, குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் ஏறாவூர் பிரதேசத்தை மையப்படுத்தி விரிவாக ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. தேசிய மட்டத்தில் இலங்கையின் கல்விப் புள்ளிவிவரங்கள் பெண்களின் கல்வி நிலை தென்னாசிய நாடுகளை விட மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பதைக் காட்டுகின்றன. இருப்பினும், தேசிய அளவிலான வெற்றிகள் அனைத்துப் பிரதேசங்களின் சமூக, பொருளாதார சவால்களையும் முழுமையாகப் பிரதிபலிக்கிறதா என்பது குறித்து கேள்விகள் எழுகின்றன. எனவே, இவ்வாய்வு ஒரு குறிப்பிட்ட உள்ளூர் சூழலைத் தேர்ந்தெடுத்து, பெண்களின் கல்வி எவ்வாறு சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஆழமாகப் புரிந்துகொள்ள முயல்கிறது. சமூக அபிவிருத்தியானது வெறும் பௌதீக வளங்களின் மேம்பாடாக மட்டும் இல்லாமல், சமூக நீதி, சமத்துவம், மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியது என்பதை கருத்தியல்ரீதியாக இவ்வறிக்கை ஏற்றுக்கொள்கிறது.

ஆய்வு முறையியல்: இந்த ஆய்வு, ஒரு கலப்பு ஆய்வு முறையியலை (Mixed-Methodology) பின்பற்றும். இது பண்புசார் (Qualitative) மற்றும் அளவுசார் (Quantitative) தரவுச் சேகரிப்பு நுட்பங்களை ஒருங்கிணைத்து, ஏறாவூர் பிரதேசத்தில் பெண்களின் கல்விப் பங்களிப்பின் பல்வேறு பரிமாணங்களையும் முழுமையாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து (Questionnaire) நேர்காணல்கள் (Interviews) மற்றும் மையக்குழுக் கலந்துரையாடல்கள் (Focus Group Discussions) பயன்படுத்தப்படும். சேகரிக்கப்பட்ட அளவுசார் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ய SPSS (Statistical Package for the Social Sciences) மென்பொருளும் பண்புசார் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ய திரட்டப்பட்ட தரவுகள், கருப்பொருள் பகுப்பாய்வு (Thematic analysis) மூலமும் ஆராயப்பட்டு பயன்படுத்தப்படவுள்ளன. இந்த முறையியல், சமூக அபிவிருத்தியில் பெண்களின் கல்விப் பங்களிப்பின் அளவையும் (Quantity) அதன் ஆழமான சமூக மற்றும் உளவியல் தாக்கங்களையும் (Quality) கண்டறிய உதவும்.

திறவுச் சொற்கள்: சமகாலம் , சமூக அபிவிருத்தி, பெண்களின் கல்வி

காலநிலைமாற்றமும் புதிய தொழில்வாய்ப்புக்களைத் தேடுவதில் எதிர்கொள்ளும் சவால்களும் (புத்தளம் கற்பிட்டி பிரதேசத்தில் கருவாடு பதனிடும் பெண்களை மையப்படுத்திய கற்கை)

மு.ச. அப்லால் [1], வ.ஜெயரூபன்[2]
சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

mohamedaflal113@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

காலநிலை மாற்றம், இலங்கை உட்பட பல நாடுகளில், விவசாயம், மீனபிடி, எரிசக்தி, போக்குவரத்து, சுற்றுலா மற்றும் மனித ஆரோக்கியம் போன்ற முக்கியத் துறைகளை கடுமையாகப் பாதிக்கிறது. விவசாயத் துறையில், அதிக மழை மற்றும் வறட்சி போனற் காலநிலை நிகழ்வுகள் பயிர்களைச் சேதப்படுத்தி விளைச்சலைக் குறைக்கின்றன. அத்துடன், கடல் மட்ட உயர்வால் ஏற்படும் உப்பு நீர் ஊடுருவல், விவசாய நிலங்களைப் பயனற்றதாக்குகின்றது. இதேபோனறு , மீன்பிடித் துறையில், கடல் வெப்பநிலை அதிகரிப்பதால் மீன்களின் இனப்பெருக்கம் மற்றும் இடப்பெயர்வு பாதிக்கப்பட்டு, மீன் வளம் கணிசமாகக் குறைகிறது.

இலங்கையின் புத்தளம் கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள பெண்கள் கருவாடு பதனிடும் தொழிலிலை பாரம்பரியமாக மேற்கொண்டு வருகின்றனர். காலநிலை மாற்றமானது பெண்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்களை கடுமையாக அச்சுறுத்துகின்றன. இந்தப் பெண்கள், ஏற்கனவே சமூக-பொருளாதார, கல்வி, முறைசாரா கல்வி மற்றும் கலாச்சாரா பண்பாட்டு சமத்துவமின்மைகளால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வாழ்வாதார இழப்புகளால் புதிய தொழில் வாய்ப்புகளைத் தேட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். இருப்பினும், இந்த மாற்றத்தில் அவர்கள் நிதிப் பற்றாக்குறை, பொருத்தமான திறன்கள் மற்றும் அறிவு இல்லாமை, புதிய முயற்சிகளுக்கான மோசமான சந்தை இணைப்புகள் மற்றும் அவர்களின் சமூக நடமாட்டத்தையும் பொருளாதார சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தும் தொடர்ச்சியான சமூக மற்றும் கலாச்சார விதிமுறைகள் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த ஆய்வு, புத்தளம் கற்பிட்டி பிரதேசத்தில் கருவாடு பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் தற்போதைய சமூக-பொருளாதார நிலைமைகளையும், காலநிலை மாற்றத்திற்கு முன் அவர்கள் ஈடுபட்டிருந்த பாரம்பரிய வாழ்வாதார நடைமுறைகளையும் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றத்தால் கருவாடு பதனிடும் தொழில் மற்றும் அதன் உற்பத்தித் தரத்தில் ஏற்படும் குறிப்பிட்ட தாக்கங்களையும், பெண்கள் எதிர்கொள்ளும் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் உடல்நல சவால்களையும், புதிய தொழில் வாய்ப்புகளைத் தேடுவதில் உள்ள தடைகளையும் பகுப்பாய்வு செய்யும்.

புத்தளம் கற்பிட்டி பிரதேசத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வு, அளவு மற்றும் பண்பு ரீதியான கலப்பு முறை ஆய்வாக அமையும். இதன் மூலம், பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதார மீள்தன்மையை மேம்படுத்துவதற்கும், புதிய தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கும் பொருத்தமான பாலின-உணர்திறன் தழுவல் உத்திகள் மற்றும் சமூகப்பணி தலையீடுகளைப் பரிந்துரைக்க முடியும். இந்த ஆய்வு, காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் விளிம்புநிலை சமூகங்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கொள்கை வகுப்பாளர்களுக்கும், சமூகப் பணித் துறைக்கும் மதிப்புமிக்க ஆதாரங்களை வழங்கும்.

திறவுச் சொற்கள் :- காலநிலை மாற்றம், வாழ்வாதாரம், மீனப்பிடித்துறை, கருவாடு பதனிடும் தொழில், முறைசாராத் துறை, பாலின சமத்துவமின்மை

இரண்டாம் நிலை பாடசாலைக் கல்வியை தொடர்வதில் பெண் மாணவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் (பொத்துவில் ஹிஜ்ரா நகர் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு)

எம்.எம்.எம். அக்றம்[1], வ.ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

akrammihran@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில், பொத்துவில் பிரதேசத்தில் அமைந்துள்ள ஹிஜ்ரா நகரில், இரண்டாம் நிலைக் கல்வியைத் தொடரும் பெண் மாணவர்கள் முகங்கொடுக்கும் சவால்களை ஆழமாக ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். தேசிய மட்டத்தில் பெண் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், போர் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட, பின்தங்கிய கிராமப்புற முஸ்லிம் சமூகமான ஹிஜ்ரா நகரில் பாடசாலை இடைவிலகல் விகிதங்கள் அதிகமாக உள்ளன. இப்பிரச்சினைக்கு வறுமை, மறைமுகக் கல்விச் செலவுகள், மற்றும் தாய்மாரின் வெளிநாட்டு வேலைவாய்ப்பினால் பெண் பிள்ளைகள் மீது சுமத்தப்படும் குடும்பப் பொறுப்புகள் போன்ற சமூக-பொருளாதாரக் காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றுடன், இளவயதுத் திருமணம், பெண் கல்வி குறித்த பாரம்பரிய சமூகக் கண்ணோட்டங்கள், மற்றும் பாதுகாப்பு குறித்த அச்சங்கள் போன்ற கலாச்சார நியமங்களும் பெரும் தடைகளாக அமைகின்றன. மேலும், பாடசாலை மட்டத்தில் காணப்படும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானப் பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை, சுகாதாரமான கழிப்பறைகள் போன்ற பௌதீக வளக் குறைபாடுகள், மற்றும் தொழில் சந்தைக்குப் பொருத்தமற்ற பாடத்திட்டம் போன்ற முறைமை சார்ந்த சவால்களும் பெண் மாணவர்களின் கல்விப் பயணத்தைப் பாதிக்கின்றன.

இந்த பன்முகப் பிரச்சினையை அதன் முழுமையான சூழலில் புரிந்துகொள்ள, இவ்வாய்வு பண்புசார் ஆய்வு அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. ஹிஜ்ரா நகரை ஒரு விடய ஆய்வாக (Case Study)க் கொண்டு, இடைவிலகிய மற்றும் கல்வியைத் தொடரும் மாணவிகள், அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் சமூகத் தலைவர்களுடன் ஆழமான நேர்காணல்கள், கலந்துரையாடல், மற்றும் அவதானிப்பு மூலம் தரவுகள் சேகரிக்கப்படும். இவ்வாய்வின் முடிவுகள், புள்ளிவிவரங்களுக்குப் நடைமுறைச் பின்னால் உள்ள மனித அனுபவங்களை வெளிக்கொணர்வதுடன், இப்பிரதேசத்தில் பெண் கல்வியை மேம்படுத்துவதற்கான இலக்கு நோக்கிய, சாத்தியமான சமூகப்பணித் தலையீடுகளையும், கல்வி அதிகாரிகளுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் உரிய பரிந்துரைகளையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

திறவுச் சொற்கள் :- இரண்டாம் நிலைக் கல்வி, கல்வி இடைவிலகல், பாலின சமத்துவம், சமூக-பொருளாதாரத் தடைகள், கலாச்சார நியமங்கள்.

இள வயது தாய்மார் குழந்தை பராமரிப்பில் எதிர்நோக்கும் சமூக சவால்கள்: வவுனியா சாஸ்த்திரிகூளாங்குளம் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகப்பணி ஆய்வு

வி. சோபனன்[1], வ. ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

sayansopa524@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இவ் ஆய்வு வவுனியா மாவட்டத்தில் சாஸ்த்திரிகூளாங்குளம் கிராமத்தில் இள வயதுத் தாய்மார் குழந்தை பராமரிப்பில் எதிர்நோக்கும் சமூக சவால்களை ஆழமாக ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இள வயதுத் தாய்மை என்பது சமூகத்தில் பல்வேறு கோணங்களில் பார்க்கப்படும் ஒரு சிக்கலான நிகழ்வாகும். இது தாய்மாருக்கும் குழந்தைக்கும் உடல்நலம், மனநலம், கல்வி, மற்றும் பொருளாதார ரீதியான சவால்களை உருவாக்குகிறது. குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில், சமூக ஆதரவு கட்டமைப்புகள் பலவீனமாக இருக்கலாம், இது இத்தகைய தாய்மார்களின் சவால்களை மேலும் அதிகரிக்கக்கூடும். இந்த ஆய்வில், இள வயதுத் தாய்மார்கள் எதிர்கொள்ளும் குடும்பரீதியான, சமூக, பொருளாதார மற்றும் உளவியல் ரீதியான சவால்களை அடையாளங்கண்டு அவற்றின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்வதனை மையப்படுத்தியாக இவ்வாய்வானது காணப்படுகிறது .

இந்த இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு முறை (Qualitative Research Method) பயன்படுத்தப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக, வவுனியாவில் உள்ள இள வயதுத் தாய்மார்களுடன் அரை-கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் (Semi-structured interviews) நடத்தப்படும். அத்துடன், சமூக நலன் சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூகப்பணியாளர்களிடமிருந்தும் தகவல்கள் திரட்டப்படும். திரட்டப்பட்ட தரவுகள், கருப்பொருள் பகுப்பாய்வு (Thematic analysis) மூலம் ஆராயப்பட்டு, இள வயதுத் தாய்மை தொடர்பான சமூக, பொருளாதார ,உளவியல் சவால்களின் ஆழமான புரிதலைப் பெறும் நோக்கம் கொண்டது. இந்த ஆய்வு முடிவுகள், இள வயதுத் தாய்மார்களுக்குத் தேவையான ஆதரவு சேவைகளை தேவையான முறைசார் நடவடிக்கைகளையும் பரிந்துரை செய்வதாக அமையும் .

திறவுச் சொற்கள்: இள வயதுத் தாய்மை, குழந்தை பராமரிப்பு, சமூக சவால்கள்,

முறைசார் தனியார் துறையில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் எதிர்நோக்கும் உள சமூக சவால்கள் (மன்னார் மாவட்ட ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் ஊழியர்களை மையமாக கொண்ட சமகால ஆய்வு)

எஸ். கிருஷாந்தினி[1], வ. ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

kirushakiru200111@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

வேகமாக வளர்ந்து வரும் ஆடைத் தொழிற்சாலைத் துறை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு செய்தாலும், இத்துறையில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் பல்வேறு சமூக மற்றும் உளவியல் அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர். இச் சவால்களின் தன்மை, காரணங்கள், மற்றும் அவர்களின் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து ஆழமான புரிதலைப் பெறுவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். இந்த ஆய்வு மன்னார் மாவட்டத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் எதிர்கொள்ளும் சமூக உளவியல் சவால்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது-.

இந்த ஆய்வு ஒரு அளவுசார் (quantitative) மற்றும் பண்புசார் (qualitative) அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளது. முதன்மை தரவுகளை சேகரிப்பதற்காக, மன்னார் மாவட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களிடமிருந்து எழுமாற்று மாதிரி (random sampling) முறையின் ஊடாக 30 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு வினாக்கொத்து (questionnaire) மற்றும் தனிப்பட்ட நேர்காணல்கள் (interviews) மூலம் தரவுகள் பெறப்பட்டன. வினாக்கொத்து முறை ஊழியர்களின் பணிச்சூழல், குடும்ப நிலைமை, மற்றும் உளவியல் நலன் தொடர்பான தரவுகளை அளவிட உதவியது. தனிப்பட்ட நேர்காணல்கள் அவர்களின் தனிப்பட்ட அனுபவங்கள், கவலைகள் மற்றும் சவால்களை ஆழமாகப் புரிந்துகொள்ள வாய்ப்பளித்தன. சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளியியல் பகுப்பாய்வு (statistical analysis) மற்றும் கருப்பொருள் பகுப்பாய்வு (thematic analysis) முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன.

திறவுச் சொற்கள்: ஆடைத் தொழிற்சாலை, பெண் ஊழியர்கள், உள சமூக சவால்கள், பணிச் சுரண்டல், உடல்நலப் பிரச்சினைகள், உளவியல் அழுத்தம்.

விசேட தேவையுடைய மாணவர்களும் ஆக்கபூர்வமான கல்வியை வழங்குவதில் விசேட கல்வி அலகும் (மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்தை மையப்படுத்திய ஆய்வு)

அ.அர்ச்சனா[1], வ.ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

archanaariyarethinam@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது, இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்வி வலயத்தில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஆக்கபூர்வமான கல்வியை வழங்குவதில் விசேட கல்வி அலகுகள் வகிக்கும் பங்கை ஆராய்வதையும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காண்வதையும் நோக்கமாகக் கொண்டது. கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளில் உள்ள விசேட கல்வி அலகுகள் 5 இவ்வாய்விற்காக தேர்வு செய்யப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட ICF மாதிரியின் அடிப்படையில் விசேட கல்வி ஆசிரியர்கள்,பெற்றோர்கள், மற்றும் பாடசாலை நிர்வாகிகள் என பங்கேற்பாளர்கள் இடம்பெற்றனர். இவ்வாய்வில் பண்பு மற்றும் அளவு ரீதியான ஆய்வு பயன்படுத்தப்பட்டது. தரவுச் சேகரிப்பிற்காக இவ் ஆய்வில் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வினாக்கொத்து ,அவதானம் ,நேர்காணல் போன்ற ஆய்வு கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டது .தரவுப் பகுப்பாய்வு முடிவுகளின் அடிப்படையில்,மாணவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது தெளிவாகத் தெரியவந்தது. இவ்வாய்வில் விஷேட தேவை உடைய மாணவர்களில் குறிப்பாக ஆண்களை விட பெண்களே அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகப்பட்டுள்ளனர். உடல் மற்றும் அறிவாற்றல் செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகள், செயல்திறன் குறைவு, சமூக பங்காற்றலில் தடைகள் மற்றும் குறைவான சூழல் ஆதரவு ஆகியவை முக்கிய பிரச்சினைகள். குறிப்பாக, கற்றல் உபகரணங்கள், போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமை, உணர்ச்சி சார்ந்த சிரமங்கள் மற்றும் சமூக பங்கெடுக்கும் வாய்ப்புகளின் குறைவு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தடுத்தன. பெற்றோரின் பங்களிப்பு குறைவு மற்றும் சமூக விழிப்புணர்வு பற்றாக்குறை கூடுதல் தடையாக விளங்கியது. இதனால், விசேட கல்வி அலகுகளின் செயல்திறனை மேம்படுத்த, ICF model அடிப்படையில் போதுமான கற்றல் வளங்கள், திறமையான மற்றும் சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சமூக பங்களிப்பு, மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் கல்வி நடவடிக்கைகள் ஆகியவற்றை செயல்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகள் மாணவர்களின் முழுமையான கல்வி முன்னேற்றத்தையும், சமூக பங்காற்றலையும் மேம்படுத்தும் சூழலை உருவாக்கும்.

திறவுச் சொற்கள் : விசேட கல்வி ,விசேட தேவையுடைய மாணவர்கள், ஆக்கபூர்வமான கல்வி

பொருளாதார நெருக்கடியும் ஜீப்சி இன மக்களின் வாழ்வாதார சவால்களும் (அம்பாறை மாவட்ட ஆலயடிவேம்பு பிரதேச செயலக அலிகம்பே கிராம சேவகர்பிரிவை மையப்படுத்திய கற்கை)

எம்.ஏ. அஸ்கர்[1], வ.ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் பல இன மக்கள் தமக்கே உரித்தான கலாச்சாரங்களுடன் வாழ்கின்றனர். இலங்கையில் காணப்படும் இவ் இனங்களுள் ஜீப்சி இனமும் ஒன்றாகும். இவ் இன மக்கள் தமக்கே உரித்தான கலாச்சாரங்களுடன் குறிப்பிட்டுக் கூறக்கூடிய நிலப்பரப்புகளில் மட்டும் வாழ்கின்றனர். இதில் அலிகம்பே பிரதேசமும் ஒன்றாகும். ஜீப்சி இன மக்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களாகவும், சமூக ரீதியாக ஒதுக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றார்கள். கடந்த காலங்களில் இருந்தே ஜிப்சி இன மக்கள் ஒரு பின்தங்கிய இனக் குழுவாக தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வாழ்ந்து வரக்கூடிய நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாக அம்பாறை மாவட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவில் பொருளாதார நெருக்கடியும் ஜிப்சி இன மக்களின் வாழ்வாதாரமும் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நேர்காணல்,அவதானம், வினா கொத்துக்கள் மூலமாக முதலாம் நிலை தரவுகளும் பிரதேச செயலக பிரிவின் பதிவுகள் மற்றும் அறிக்கைகள் மூலமும், அச்சமுதாய மக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமாகவும் இரண்டாம் நிலை தரவுகளும் பெறப்பட்டது.

மேலும் இவ்வாய்வானது அளவுசார் மற்றும் பன்புசார் முறைகளைப் பயண்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கலப்பு முறை ஆய்வாகவும் காணப்படுகின்றது. இச் சமூக மக்களை பொறுத்தமட்டில் அவர்களின் பாரம்பரிய தொழிலான வேட்டையாடுதல், கூட்டங்களுக்கு முன்னால் பாம்பாட்டம் மற்றும் குரங்காட்டம் வித்தை காட்டல், உளர் உணவுகளை சேகரித்தல், மீன்பிடித்தல் மற்றும் மந்தை வளர்ப்பு போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய நிலை காணப்பட்டது. இவை கால மாற்றம் மற்றும் அரசியல் கொள்கைகள் காரணமாக மாற்றம் அடைந்து மீன்பிடி, விவசாயம், நெற்பயிர்ச்செய்கை, மீன் வியாபாரம் மற்றும் மந்தை வளர்ப்பு போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய நிலைமை காணப்பட்டது. ஆனால் அன்மையில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது இலங்கையில் காணப்பட்ட ஏனைய சமூக மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்தது போன்று இம் மக்களின் வாழ்வாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக அவர்களின் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாது போனதையும் போக்குவரத்துக்கான தடங்கள் காரணமாகவும் இம்மக்கள் பேருந்துகளில் சிறு வியாபாரம் செய்தல், கூலி வேலை, குறிப்பாக வீடு வீடாக சென்று துணி விற்றல், ஆண்கள் மீன்பிடி, விவசாயம், பேருந்துகளில் சிறு வியாபாரம் செய்தல் போன்ற வாழ்வாதர செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டனர். அதேவேளை அவர்களின் பாரம்பரிய தொழில்களான பாம்பாட்டம் காட்டல்,குரங்கு வித்தை காட்டல், பெண்கள் குறிப்பாக குறி சொல்லள் மற்றும் மாயாஜால வித்தைகள் காட்டல், பிச்சை எடுத்தல் மற்றும் பனை ஒதுதல் போன்ற கடந்த கால தொழில்கள் சிறிது சிறிதாக குறைக்கப்பட்டு அம்மக்கள் வேறு வாழ்வதார செயற்பாடுகளில் ஈடுபட தூண்டியுள்ளது.

திறவுச் சொற்கள் ஜிப்சிகள், பொருளாதார நெருக்கடி, வாழ்வாதார சவால்கள்

பெருந்தோட்ட துறை மக்களின் நிதி முகாமைத்துவத்தில் பெண்களின் வகிபங்கும் வறுமையும்

சி. இசைவாணி[1], வ.ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வு சுருக்கம்

பெருந்தோட்ட துறை மக்களின் நிதி முகாமைத்துவத்தில் பெண்களின் வகிப்பங்கும் வறுமையும் என்ற அம்சத்தினை மையமாக கொண்டு இந்த ஆய்வானது மேற்கொள்ளபடுகின்றது. இலங்கையின் ஊவா மாகாணம், குறிப்பாக பதுளை மாவட்டத்தின் அலகொல்ல கிராமத்தை மையப்படுத்திய பெருந்தோட்டத் துறை சமூகங்கள், நாட்டின் மிகவும் புறக்கணிக்கப்பட்ட மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய மக்களாக கருதப்படுகின்றனர். வரலாற்று ரீதியாக, இம்மக்கள் குறைந்த வருமானம், தாழ்ந்த வாழ்க்கைத் தரம், கல்வி மற்றும் சுகாதார வசதிகளின் குறைபாடு, மேலும் நீடித்த வறுமை ஆகிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இத்தகைய சமூக-பொருளாதார சூழலில், குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் நலன்களை தீர்மானிப்பதில் நிதி முகாமைத்துவம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆண்களும் பெண்களும் சமமாகவே பெருந்தோட்ட உழைப்பில் ஈடுபட்டாலும், பெரும்பாலும் நிதி தொடர்பான முடிவெடுப்புகளில் ஆண்களின் செல்வாக்கானது மேலோங்கி காணப்பகிறது. இத்தகைய பாலின சமத்துவமின்மை மற்றும் வீணான செலவழிப்பு முறைகள், அப்பகுதியின் வறுமை நிலையை தீவிரமாக பாதிக்கின்றது.

இந்த ஆய்வு, பெருந்தோட்டத் துறை சமூகத்தில் பெண்களின் நிதி முகாமைத்துவத்தில் உள்ள வகிபங்கையும், அது வறுமையுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதையும் ஆராய்கிறது. பெண்களும் ஆண்களும் சமமாக உழைப்பினை வழங்கினாலும், நிதி தொடர்பான முடிவெடுப்புகளில் ஆண்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்பதையும், மேலும் ஆண்களின் வருமானத்தின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதி மதுபானம் மற்றும் அத்தியாவசியமற்ற தேவைகளுக்காக செலவிடப்படுவதையும் வெளிப்படுத்துகின்றன. இதன் விளைவாக குடும்பச் சேமிப்புகள் குறைந்து , கடன் சுமை அதிகரிக்கின்றது, வறுமையானது அதிகரித்துச் செல்கின்றது.

இதற்கு மாறாக, பெண்கள் குடும்ப வருமானத்தின் மீது குறைந்த கட்டுப்பாடு இருந்தாலும், நிதி ஒழுக்கம் கொண்டவர்களாக இருந்து உணவு பாதுகாப்பு, குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் கடன் அடைத்தல் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றனர். அவர்களின் நிதி முகாமைத்துவம் பொருளாதாரச் சிரமங்களுக்கு மத்தியில் பொறுப்புணர்வையும், தாங்கும் திறனையும் வெளிப்படுத்துகிறது. எனினும், சமூகச் சீர்கேடுகள், கட்டமைப்பு சமத்துவமின்மை மற்றும் ஆண் ஆதிக்கம் கொண்ட நிதி முடிவுகள், பெண்கள் அதிக நிதி அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்கின்றன.

இது பெண்களின் நிதி முகாமைத்துவத்தில் உள்ள வகிபங்கையும், வறுமையுடனான அதன் தொடர்பையும் ஆராய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, நேரடியாக சேகரிக்கப்பட்ட தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரண்டும் பயன்படுத்தப்பட்டு வினாகொத்து(Questionnaires), நேர்காணல்கள் (Interviews) என்பவற்றின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்படும்.

பெண்களை நிதி முடிவெடுப்புகளில் வலுப்படுத்துதல், மற்றும் சமூக அடிப்படையிலான சேமிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல், மதுபானப் பழக்கம் மற்றும் வீணான செலவழிப்பை குறைக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். ஆகியவை, பெருந்தோட்டத் துறை

சமூகங்களில் நீடித்த வறுமையை இல்லாது செய்வதற்கான முக்கியமான அம்சமாக காணப்படுகின்றது. பெண்களின் நிதி முகாமைத்துவப் பங்கு வலுவடைவதன் மூலம் குடும்ப நலன்கள் மட்டுமல்லாது, புறக்கணிக்கப்பட்ட பெருந்தோட்டக் சமூகங்களின் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றமும் மேம்படுத்தப்படுத்தபடும்.

திறவுச் சொற்கள் : நிதி முகாமைத்துவம், வறுமை, பெண்கள், ஆணாதிக்கம்

பெண் தலைமை தாங்கும் குடும்பத்தில் வறுமைக் குறைப்பில் சமுர்த்தி திட்டத்தின் வகிபங்கு:திருக்கோவில் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

செம்பொற்சோதி சாயிந்தி[1], வ.ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

s.sainthy2000@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் வறுமை குறைப்பை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்ட மிக முக்கியமான சமூக நலத் திட்டமாக சமுர்த்தி திட்டம் திகழ்கிறது. 1995 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம், வறுமைக் கோட்டிற்குள் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு, அவர்களை சமூக-பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்டது. இக்கட்டுரையின் முதன்மை நோக்கம், அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் தம்பிலுவில் 1 தெற்கு கிராமத்தின் பெண் தலைமை தாங்கும் குடும்பத்தின் வறுமை குறைப்பில் சமுர்த்தி திட்டத்தின் வகி பங்கு, அதன் தாக்கங்கள் மற்றும் எதிர்நோக்கும் சவால்களை ஆய்வு செய்வதாகும்.ஆய்வுக்கான தரவுகள் வினா கொத்து, மற்றும் அரசாங்க அறிக்கைகள் வழியாக சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் அளவியல் (quantitative) முறைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வின் முடிவுகள், சமுர்த்தி உதவித்தொகை பெற்ற குடும்பங்கள் தங்களின் அடிப்படை உணவு, உடை, கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யக் குறைந்தபட்ச வருமான பாதுகாப்பைப் பெற்றுள்ளன என்பதை வெளிப்படுத்தின. மேலும், சமூக பங்குபற்றுதல் மற்றும் பெண்களின் பொருளாதார பங்கேற்பு ஒரு அளவிற்கு அதிகரித்துள்ளதையும் கவனிக்க முடிந்தது.எனினும், இந்தத் திட்டத்தின் நீடித்த தாக்கங்கள் குறைவாக உள்ளன. குறிப்பாக வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில் முனைவு வளர்ச்சி மற்றும் இளைஞர்களின் திறன் மேம்பாடு போன்ற துறைகளில் பலவீனங்கள் தென்பட்டன. அரசியல் தலையீடு, பயனாளிகள் தேர்வு முறைகளில் உள்ள குறைகள், மற்றும் சில பயனாளிகள் நீண்டகாலமாக திட்டத்தின்மீது சார்ந்திருப்பது போன்ற பிரச்சனைகள் திட்டத்தின் செயல்திறனை பாதிக்கின்றன.இதனால், சமுர்த்தி திட்டம் வெறும் நிவாரண உதவித் திட்டமாக மட்டும் இல்லாமல், மக்களின் சுயநிலைத்தன்மை (ளநடக-ளரளவயையெடிடைவைல) மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் மறுசீரமைத்தல் அவசியம் என ஆய்வு பரிந்துரைக்கிறது. இதற்காக, வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டங்களுடன் இணைத்தல், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்குதல், மற்றும் கண்காணிப்பு முறைகளை வலுப்படுத்துதல் தேவைப்படுகிறது.

திறவுச்சொற்கள் : வறுமை குறைப்பு, சமுர்த்தி திட்டம், சமூக முன்னேற்றம், பொருளாதார நிலை, இலங்கை

போதைப் பொருள் பாவனையும் பொருளாதார ரீதியான சவால்களும் (பெரிய நீலாவனை1B பிரதேசத்தில் உள்ள வாழ்க்கைத் துணையினரை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

கே. அனுஜா[1], வ.ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

சமகால உலகானது எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் மிக முக்கியமான பிரச்சினையாக போதைப்பொருள் பாவனையானது காணப்படுகின்றது. போதைப் பொருளானது தனிமனிதனையும் சமூகத்தையும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்ற அதே நேரம் பல்வேறு வகையான சமூகப் பிரச்சினைகள் மற்றும் பொருளாதார பிரச்சனைகளை தலை தூக்குவதற்கும் காரணமாக அமைகின்றது. அத்தோடு இந்த போதை பொருள் பாவனையானது ˙நபர்களுக்கிடையில் பரவுகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதன்படி போதை பொருள் பாவனையானது குடும்பத்தில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாகவும், இந்த நடத்தை வெளிப்பாடுகளானது பொருளாதார பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கின்றது. அதனால் ஏற்படும் விளைவுகள் போன்றவைகளை கண்டறியும் நோக்கமாக போதைப்பொருள் பாவனையும் பொருளாதார ரீதியான சவால்கள் (பெரிய நீலாவணை 1B பிரதேசத்தில் உள்ள வாழ்க்கைத் துணையினரை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) என்ற தலைப்பில் பெரியநீலாவனை பிரதேசத்தினை மையப்படுத்தியதாக இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்விற்காக அளவு ரீதியான முறைமை பயன்படுத்தப்பட்டது. அத்தோடு முதலாம் நிலைத் தரவுகளான நேர்காணல், அவதானம் இரண்டாம் நிலை தரவுகளான சஞ்சிகைகள், ஆய்வுகள் நூல்கள், அறிக்கைகள் போன்றவற்றின் உதவியுடன் தரவுப் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக பொலீஸ் அதிகாரி, வைத்திய அதிகாரி, பிரதேச செயலக போதைப்பொருள் தொடர்பான வெளிக்கள உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் ,மக்கியஸ்தர்கள் ஆகியோரிடம் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு தகவல்கள் பெறப்பட்டது. இதனோடு 300 குடும்பங்கள் எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டு தரவுகளின் உதவியுடன் தரவுப் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் இந்த ஆய்வானது போதைப்பொருள் பயன்படுத்தும் குடும்பத் தலைவர்களின் வாழ்க்கை துணை பெண்கள் எதிர் கொள்ளும் பொருளாதார சவால்களை ஆராய்கின்றது போதைப்பொருள் பாவனை குடும்பங்களின் சமூக மற்றும் உளவியல் நலனை மட்டுமல்லாமல் கடுமையான நிதிசார் சுமைகளையும் ஏற்படுத்துகின்றது போதைப்பொருள் பயன்படுத்தும் தலைவர்களின் வாழ்க்கை துணை பெண்கள் பெரும்பாலும் குடும்ப பொறுப்புகளின் முதன்மையாக காணப்படுகின்றனர். இதனால் குடும்ப வருமானம் கணவரின் நிரந்தரமற்ற வேலைவாய்ப்பு, சேமிப்புகளின் இழப்பு ,கடன் அதிகரிப்பு ,போன்ற விளைவுகளை எதிர்கொள்கின்றனர். நிதி தொடர்பான சிக்கல்கள், அதிகரித்த மருத்துவ செலவுகள், குழந்தைகளின் கல்வியை தொடர வேண்டிய கட்டாயம், ஆகியவை அவர்களின் பொருளாதார பாதிப்பை மேலும் தீவிரப் படுத்துகின்றன. போதைப் பொருள் பாவனை காரணமாக அவர்களது துணையினர் தலைகுனிந்து வாழுதல், மற்றும் கணவரின் போதைப்பழக்கம் தொடர்பாக வெளியில் சொல்ல முடியாத நிலை, மற்றும் விவாகரத்து தொடர்பான உரிமைகள் போன்ற சமூக பண்பாட்டு விடயங்களும் பால்நிலை வகிபங்குகளாக வீட்டை பாதுகாத்தல், குழந்தை வளர்ப்பு, குடும்பத்தை நடத்தும் பொறுப்பு, இவ்வாறான பால்நிலை வகிபங்குகள் காரணமாக தங்களது சுதந்திரத்தையும் வாழ்வியலையும் இழக்கின்றனர். போதைப்பொருள் பாவனை வாழ்க்கைத் துணைப் பெண்களின் பொருளாதார நிலைத் தன்மையை எவ்வாறு பாதிக்கின்றது அவர்கள் பயன்படுத்தும் உத்திகள் மற்றும் வறுமையின் விளைவுகள் குறித்த இந்த ஆய்வு வலியுறுத்துகின்றது.

அவ்வாறே பெண்கள் உணவு ,உடை சுகாதாரம், கல்வி வீடு, போன்ற அடிப்படை தேவைகளை நிர்வகிக்க முடியாமல் பலர் கடனில் சிக்கின்றனர் .சிலர் வேலைக்குச் செல்லும் கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர் இது அவர்களின் வாழ்நிலை, மனநிலை, மற்றும் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதிக்கின்றது. இவ்வாறே இவ்வாய்வு வலியுறுத்துகின்றது.

திறவுச்சொற்கள் : போதைப்பொருள் பாவனை,பெண்கள்,பொருளாதார சுமை

நெல் அறுவடையில் இயந்திர பாவனையினால் பெண் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் (அட்டாளைச்சேனை பிரதேசத்தினை மையப்படுத்திய ஆய்வு)

ஏ.ஜி. அகமட் பஸ்றின்[1], வ.ஜெயரூபன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

fasrinahamed7@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

உலகளாவிய ரீதியில் நெல் உற்பத்தியானது இன்றியமையாத ஒரு பொருளாதார நடவடிக்கையாக திகழ்கிறது நெல் உற்பத்தியானது இன்று ஆசியாவின் பிரதான உணவாகவும் மாறியுள்ளது. நெல் உற்பத்தி ஆசியப் பகுதிகளில், குறிப்பாக இந்தியா, இலங்கை, வங்காளதேசம் போன்ற நாடுகளில் மிக முக்கியமான வேளாண்மை செயற்பாடாகும். பாரம்பரிய முறையில் நெல் அறுவடை கையால் மேற்கொள்ளப்பட்ட நிலையில், சமீப காலங்களில் இயந்திரப் பாவனை (Harvesting machines, Combine harvesters) வேகமாக பரவியுள்ளது. இயந்திரப் பாவனை மூலம் உற்பத்தி திறன் அதிகரிக்கின்றது, உழைப்பு செலவு குறைகிறது. நேரம் மிச்சமாகிறது. எனினும், இந்த நவீனமயமாக்கல் பெண் தொழிலாளர்களின் சமூக-பொருளாதார நிலைமைக்கு பல சவால்களை உருவாக்கியுள்ளது. பெண்கள் பாரம்பரியமாக நெல் அறுவடைத் துறையில் அதிக அளவில் ஈடுபட்டிருந்தனர். இயந்திரப் பாவனையால் அவர்களின் பங்கு குறைந்து, வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. இயந்திரப் பாவனை காரணமாக பெண்கள் எதிர் கொள்ளும் முக்கிய சவாலாக வேலை வாய்ப்பு குறைவடைந்ததாகும் இதனால் கையால் அறுவடை செய்தல், நெல் கட்டுதல், அறுவடையின் பின் நெல்லை பிரித்தல், நெல் சுத்திகரிப்பு செய்தல் போன்ற பணிகளில் அதிகளவான பெண்கள் ஈடுபட்டிருந்த நிலையில் தற்போது தொழில்நுட்பம் காரணமாக இயந்திரங்களின் பாவனையின் காரணமாகவும் இப்பணிகளை அனைத்தையும் ஒரே நேரத்தில் மேற்கொள்கின்றது. பெண்களுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்புகளானது முற்றாக குறைவடைந்துள்ளதனால் அறுவடை காலங்களில் வேலைக்குச் சென்று தினக் கூலிகளை பெற்று தனது குடும்பங்களையும் வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு தொழில் வாய்ப்பு இல்லாமல் ஒழிக்கப்பட்டது.

ஆய்வு பிரதேசமான அட்டாளைச்சேனைப் பிரதேசமானது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமையப்பெற்ற விவசாய கிராமமாகும் இப்பிரதேசத்தின் நெற் பயிர்ச்செய்கையானது பல பகுதிக சமூக பொருளாதார காரணிகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளினாலேயே தீர்மானிக்கப்படுகிறது அண்மைக்காலங்களில் இவ்வாறான நவீனமயமாக்கல் தாக்கத்தின் காரணமாக விவசாயத்தில் ஈடுபடக்கூடிய பெண் தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் அவற்றிலிருந்து எவ்வாறு விடுபடலாம் போன்ற கேள்விகளுக்கு விடை காணும் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்வதற்காக முதலாம் நிலை தரவுகள் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தி தரவுகள் சோதிக்கப்படவுள்ளது முதலாம் நிலை தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு ஆகிய முறைகளும் இரண்டாம் நிலை தரவுகளாக பல்வேறுபட்டு அலுவலகங்களிலுள்ள விபரங்கள், அறிக்கைகள், இணையதளம், நூல்கள் முதலியன பயன்படுத்தப்படவுள்ளன. எனவே ஆய்வு பிரதேசத்தில் பொருளாதார ரீதியாக ஏற்படக்கூடிய இழப்புக்களில் இருந்து எவ்வாறு பெண்களை மீண்டு தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளலாம் என்ற பரிந்துரைகளை இனங் கண்டு ஆய்வு பிரதேசத்தில் பெண்களுக்குள்ள பிரச்சினைகளுக்கு எவ்வாறான சிபாரிசுகளை குறிப்பிடலாம் என்ற நம்பிக்கை இவ்வாய்வில் எதிர்பார்க்கப்படுகிறது.

திறவுச்சொற்கள் : பெண்கள், அறுவடை, இயந்திரம்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தாயின் தொழில் ரீதியான நகர்வும் பிள்ளைகளின் கற்றலும் - திருக்கோவில் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட விபரண ஆய்வு

ஜீ.ஜீவஜோதி

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வு சுருக்கம்

இலங்கையில் பெண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான இடம்பெயர்வு கடந்த இரு தசாப்தங்களில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இந்த ஆய்வு இப் பிரதேசத்தில் தாய்மார்களின் நகர்வு அவர்களின் பிள்ளைகளின் கற்றல் செயல்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. தாய்மார் வெளிநாட்டிற்கு சென்றுள்ள குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் பல்வேறு சவால்களை முகம் கொடுப்பதனால் கல்வியில் பின்னடைவினை எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் மாணவர்களின் பரீட்சையில் குறைந்த பெறுபேறு, வருகை விகிதம், கவனக் குறைபாடு, உறவுமுறை சிக்கல்கள் என்பதே இவ்வாய்வின் முக்கிய ஆய்வு பிரச்சனையாக அமைந்துள்ளது. ஆய்வு புலம்பெயந்த தாய்மார்களின் பிள்ளைகளின் 56 பேர் தேர்வு செய்யப்பட்டன. தரவு சேகரிப்பு கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள், மையக்குழு கலந்துரையாடல், மற்றும் மாணவர் கணிப்பீட்டறிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்டது. இப் பிள்ளைகளில் 78% பேர் கல்வி செயல்திறனில் குறைபாடு காட்டினர் அதிலும் குறிப்பாக கணிதம் மற்றும் ஆங்கிலம் பாடங்களில் குறிப்பிடத்தக்க தரம் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது வீட்டுப்பாடம் நிறைவேற்றுவதில் 45% பிள்ளைகள் ஒழுங்கின்மை காட்டினர். பிரிவுக் கவலை மற்றும் தனிமை உணர்வு 62% பிள்ளைகளிடம் காணப்பட்டது. சமூக ஆதரவு அமைப்புகளின் வலுப்படுத்தல் பாடசாலைகளில் உளவியல் ஆலோசனை சேவைகள் நிறுவுதல் பராமரிப்பாளர் பயிற்சி திட்டங்கள் தந்தைமார்கள் மற்றும் மூத்த குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி ஆதரவு வழங்கும் திறன்களை மேம்படுத்துதல். தாய்மார்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு குடும்பங்களுக்கு பொருளாதார நன்மைகளை வழங்கினாலும், பிள்ளைகளின் கல்வி மற்றும் உணர்வுரீதியான வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க சவால்களை ஏற்படுத்துகிறது. சமூக கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் இடம்பெயர்வின் எதிர்மறை தாக்கங்களை குறைத்து, பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்க முடியும். பிள்ளைகளின் கல்விச் சாதனைகளை மேம்படுத்த தாய்களின் புலம்பெயர்விற்கு மாற்றாக உள்ளூர் வேலை வாய்ப்புகளை அரசு மற்றும் தனியார் அமைப்புகள் ஊக்குவிக்க வேண்டும். தாய்மார்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் போது, பிள்ளைகள் மீது பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க மனோவியல் ஆலோசனை மற்றும் சமூகபணி சேவைகள் அமைக்கப்பட வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து புலம்பெயர் பெற்றோர் குழந்தைகளுக்கு சிறப்புப் பராமரிப்பு திட்டங்களை வகுக்க வேண்டும். எதிர்காலத்தில் புலம்பெயர்ந்து உள்ள தாய்மார்கள் மீதான உளவியல் பாதிப்புகள் மற்றும் குடும்ப உறவுகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதும், தந்தையின் பங்கு மற்றும் பிள்ளைகள் மீதான தாயின் தாக்கத்தை ஒப்பீடு செய்யும் கலந்த ஆய்வுகள். பல்வேறு மாவட்டங்களையும் அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வுகள் செய்வதன் மூலம், தேசிய ரீதியான பரிந்துரைகள் உருவாக்கல்.

திறவுச் சொற்கள் : வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தாய்-பிள்ளை பிரிவு, கல்வி செயல்திறன், மத்திய கிழக்கு இடம்பெயர்வு, சமூக ஆதரவு

இலவச நிகழ்நிலை விளையாட்டுகளினால் ஆண் மாணவர்களின் கல்வியில் ஏற்படும் பின்னடைவு- மட்டக்களப்பு அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

தி.யுகதாரணி[1], யா.மு. நிம்சாத்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ytthiyagalingam@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலவச நிகழ்நிலை விளையாட்டுகள் (free online games), உலகளாவிய ரீதியில் இளம் வயதுடையோரிடையே மிகவும் பிரபலமாக உள்ளன. குறிப்பாக, ஆண் மாணவர்கள் மத்தியில் இதன் பயன்பாடு அதிகரித்து வருகின்றது. இணைய இணைப்புகள் எளிதாகவும், இலவசமாகவும் கிடைப்பதால், மாணவர்கள் தங்கள் பெரும்பாலான நேரத்தை இவ்விளையாட்டுகளுக்காகச் செலவிடுகின்றனர். இது அவர்களின் கல்வி மற்றும் அன்றாட வாழ்வில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒரு புதிய சவாலாக உள்ளது. இவ்வாய்வின் பிரதான நோக்கம், இலவச நிகழ்நிலை விளையாட்டுகளின் பயன்பாட்டிற்கும், தரம் 10 ஆண் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் ஏற்படும் பின்னடைவுகளுக்கும் இடையிலான தொடர்பை கண்டறிவதாகும். குறிப்பாக, மாணவர்களின் பாடசாலை வருகை, வீட்டுப் பாடங்களைச் சமர்ப்பிக்கும் திறன், பரீட்சைப் பெறுபேறுகள், மற்றும் வகுப்பறை ஈடுபாடு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்வது இந்த ஆய்வின் இலக்காகும். இலவச நிகழ்நிலை விளையாட்டுகளில் ஈடுபடும் ஆண் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, இது அவர்களின் கல்விச் செயற்பாடுகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாகக் கருதப்படுகிறது. அதிக நேரம் விளையாடுவதால், மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் குறைவதுடன், வகுப்பறையில் கவனச்சிதறலும், தூக்கமின்மையும் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்த விளையாட்டுகளின் அடிமைத்தனம் போன்ற தன்மை மாணவர்களின் எதிர்காலத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றிய தெளிவான புரிதல் அவசியமாகிறது. இந்த ஆய்வு ஒரு அளவுசார் (quantitative) அணுகுமுறையைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டது. தரம் 10 படிக்கும் 52 ஆண் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களிடம் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து வழங்கப்பட்டது. இதன் மூலம், அவர்களின் இணைய விளையாட்டுகளின் பயன்பாட்டு நேரம், கல்விச் செயற்பாடுகள், மற்றும் உளவியல் நிலைமைகள் குறித்த தரவுகள் சேகரிக்கப்பட்டன. மாணவர்கள் வாரத்திற்கு சராசரியாக 12 மணிநேரத்திற்கும் அதிகமாக இலவச நிகழ்நிலை விளையாட்டுகளில் செலவிடுகின்றனர். அதிக நேரம் விளையாடும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள், குறைவாக விளையாடும் மாணவர்களின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில், குறிப்பிடத்தக்க அளவில் குறைவாக உள்ளது. விளையாட்டுகளில் அதிக ஆர்வம் கொண்ட மாணவர்கள், பாடசாலை வகுப்புகளில் கவனம் செலுத்தத் தவறுவதாகவும், வீட்டுப் பாடங்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் ஏற்படுவதாகவும் பாடசாலை வரவு குறைவாகவும் காணப்படுகின்றது என்று தெரியவந்துள்ளது. விளையாட்டுகளினால் ஏற்படும் தூக்கமின்மை மற்றும் உடல் சோர்வு, மாணவர்களின் ஒட்டுமொத்த உடல்நலனையும், மனநிலையையும் பாதிக்கிறது. பாடசாலைகள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து, மாணவர்களுக்கு இணைய விளையாட்டுகளின் பாதகமான விளைவுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மாணவர்களின் கல்வி மற்றும் பொழுதுபோக்கிற்கான நேரத்தை ஒழுங்கமைக்க உதவ வேண்டும். ஆசிரியர்களும், ஆலோசகர்களும் மாணவர்களுடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடி, அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்க வேண்டும். பாடசாலைகளில் ஆக்கபூர்வமான மாற்று நடவடிக்கைகளை (விளையாட்டுக்கள், கலைச் செயற்பாடுகள்) ஊக்குவிப்பது, மாணவர்களின் கவனத்தை வேறு திசையில் திருப்ப உதவும்.

திறவுச் சொற்கள்: இலவச நிகழ்நிலை விளையாட்டுகள், கல்விப் பின்னடைவு, ஆண் மாணவர்கள், அடிமைத்தனம், பாடசாலை வருகை, பரீட்சைப் பெறுபேறுகள்.

அதிகரித்துவரும் குடும்ப வன்முறையும் அதனால் பெண்கள் எதிர்நோக்கும் உளரீதியான சவால்களும் : மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் அதிகார சபையை மையப்படுத்திய ஓர் ஆய்வு

வி.கம்ஷகா[1], யா.மு. நிம்ஷாத்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

kamshakapaskar@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

கிழக்கிலங்கையில் உள்ள மாவட்டங்களில் ஒன்றான மட்டக்களப்பு மாவட்டமானது பல சமூக இயல்புகளைக் கொண்ட மக்கள் வாழும் பிரதேசமாகும். இதில் ஆய்வுப் பிரதேசமான மண்முனை வடக்கு பிரதேச செயலக ஆளுகைக்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில் மாவட்ட பெண்கள் அதிகார சபை அமைந்து காணப்படுகின்றது. ''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது அதனினும் மங்கையராய்ப் பிறத்தல் மிக மிக அரிது''. எனவே இப்பூமிதனில் பெண்ணாய் பிறந்த நாம் ஒவ்வொருவரும் பெருமைகொள்ள வேண்டும். பெண் என்பவள் இவ் உலகம் தோன்றியது முதல் குழந்தை, சகோதரி, தோழி, உயிரை உருவாக்கக்கூடிய விசேட திறனை தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் தாய் எனப் பல்வேறுபட்ட வகிபங்கினை ஏற்பவளாகவும் பல கதைகளையும் கருத்துக்களையும் கூறி வழிநடத்தும் தனித்துவம் வாய்ந்தவளாகவும் காணப்படுகின்றாள்.

இத்தகைய போற்றுதற்கரிய பெண்கள் தற்காலத்தில் அதிகரித்து வருகின்ற குடும்ப வன்முறைகளின் காரணமாக உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். அதிலும் மிக முக்கியமானதாக உள ரீதியான சவால்கள் காணப்படுகின்றது எனலாம்.

அந்தவகையில் பெண்கள் குடும்ப வன்முறை காரணமாக எதிர்நோக்கும் உளரீதியான சவால்களாக மன அழுத்தம், பதற்றம், அதிக கவலை, தாழ்வு மனப்பான்மை, வன்முறை காரணமான மன வேதனை போன்றவற்றினைக் குறிப்பிட முடியும். எனவே மாவட்ட பெண்கள் அதிகார சபைக்கு சேவையைப் பெற்றுக்கொள்ள வரும் பெண்களின் குடும்ப வன்முறை காரணமாக எதிர்நோக்கும் உளரீதியான சவால்கள் எனும் இவ் ஆய்வில் தரவு சேகரிப்பு முறைகளான பண்புசார் தரவு திரட்டலின் மூலம் விவரண ஆய்வு முறையைப் பயன்படுத்தி முதலாம்நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கருத்தியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட உள்ளது. நோக்கமாதிரி எடுப்பு முறை மூலம் மாவட்ட பெண்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுடனும் சேவைநாடிகள் பதினைந்து பேருடனும் மேற்கொண்ட அவதானம், நேர்காணல், விடயக்கற்கை மூலம் தரவுகள் பெறப்பட்டதுடன் இரண்டாம்நிலைத் தரவுகளாக புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டன.

திறவுச் சொற்கள் :குடும்ப வன்முறை, உளரீதியான சவால்கள், பெண்கள், மன அழுத்தம், பதற்றம், அதிக கவலை, தாழ்வு மனப்பான்மை, வன்முறை

ஆரம்பபிரிவு மகளீர் பாடசாலை மாணவிகளின் மொழித்திறனை விருத்தி செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் கற்பித்தல் ரீதியான சவால்கள்: வவுனியா சைவபிரகாச மகளீர் ஆரம்ப பாடசாலையை மையமாகக் கொண்ட ஆய்வு

சி. சகிஅபிசேகா[1] வ.ஜெயரூபன்[2]
சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

sahiabiseka@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இந்த ஆய்வு, இலங்கையின் ஆரம்பக் கல்விச் சூழலில், தாய்மொழி வழிக் கற்பித்தலில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்கிறது. குறிப்பாக, வவுனியா சைவபிரகாச மகளீர் ஆரம்ப பாடசாலையைத் களமாகக் கொண்டு, அங்குள்ள மாணவிகளின் தமிழ் மொழித்திறனை (கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல்) விருத்தி செய்வதில் ஆசிரியர்கள் சந்திக்கும் கற்பித்தல் முறையியல், கலைத்திட்டம் சார்ந்த, மற்றும் முறைமை சார்ந்த இடர்ப்பாடுகளை இனங்காண்பதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கையின் கல்விக் கொள்கையில் ஆங்கில மொழிக்கு வழங்கப்படும் சமூகப் பொருளாதார முக்கியத்துவம், தேர்வு மையக் கல்வி முறையின் அழுத்தம், குறிப்பாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, மற்றும் வளப் பங்கீட்டில் காணப்படும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் போன்ற பரந்த தேசியப் பிரச்சினைகள், தமிழ் மொழி கற்பித்தலின் தரத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பது இவ்வாய்வில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. கலப்பு முறையியல் (வினாக்கொத்து, நேர்காணல், வகுப்பறை அவதானிப்பு) ஊடாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டு, ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களான மாணவர்களிடையே காணப்படும் கற்றல் வேறுபாடுகள், நவீன கற்பித்தல் முறைகளில் பயிற்சியின்மை, மற்றும் கேட்டல், பேசுதல் போன்ற தொடர்பாடல் திறன்கள் புறக்கணிக்கப்படுதல் போன்றவை ஆழமாக விவாதிக்கப்படுகின்றன. முறைமையான ஆதரவற்ற நிலையிலும் ஆசிரியர்கள் கையாளும் தனிப்பட்ட புதுமையான உத்திகள் ஆவணப்படுத்தப்பட்டு, ஆராயப்படுகின்றன. இறுதியாக, கண்டறியப்பட்ட சவால்களின் அடிப்படையில், இலங்கையின் கல்விக் கொள்கை வகுப்பாளர்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பாடசாலை நிர்வாகம் ஆகிய தரப்பினருக்கு நடைமுறைச் சாத்தியமான, பல மட்டப் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

திறவுச் சொற்கள் :- மொழித்திறன் விருத்தி, ஆரம்பக் கல்வி, கற்பித்தல் சவால்கள், தாய்மொழிக் கல்வி, தேர்வு மையக் கல்வி, ஆசிரியர் தொழில்சார் மேம்பாடு.

இளவயது திருமணத்தினால் சிறுமிகள் எதிர்நோக்குகின்ற சமூக ரீதியான சவால்கள் (உயரப்புலம் கிராமத்தை மையப்படுத்திய ஆய்வு)

உ. மதுஷாளினி[1] , த. தர்ஸன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

இளவயது திருமணம் சிறுமிகளின் வாழ்க்கையை பாதிக்கின்ற ஒரு சமூகச் சவாலாக காணப்படுகின்றது. இளவயது திருமணமத்திற்கான சமூகக் காரணிகளாக பால்நிலை வேறுபாடு, பாடசாலை இடைவிலகல், பெற்றோர்களுக்கிடையிலான முரண்பாடுகள், வழக்காற்று நடைமுறைகள், சீதனம், பெற்றோர் இளவயதில் திருமணம் புரிந்திருத்தல் போன்றன காணப்படுகின்றன. எனவே இவ்வாய்வானது உயரப்புல கிராமத்தில் இளவயது திருமணத்தினால் சிறுமிகள் எதிர்நோக்குகின்ற சமூக ரீதியான சவால்களை ஆராய்தலை நோக்கமாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக இணைந்தஆய்வுமுறை தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் இளவயதில் திருமணம் செய்து கொண்ட 20 சிறுமிகள் எளியஎழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து முறைமூலம் தரவு திரட்டப்பட்டதுடன் குறித்த சிறுமிகளுடன் பணியாற்றும் தொழில்வாண்மையாளர்கள் மற்றும் சமூகமட்ட பிரதிநிதிகள் 06 பேரிடம் பிரதானதகவல்தருநருடனான நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகளாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள், ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் போன்றவற்றின் மூலம் திரட்டப்பட்டது. பண்புசார் ஆய்வுமூலம் திரட்டப்பட்ட தரவுகள் கருத்தியில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அளவைசார் ஆய்வு மூலம் திரட்டப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டது. இவ் ஆய்வுப் பிரதேசத்தில் இளவயது திருமணத்திற்கான காரணங்களாக வறுமை, காதல், பாதுகாப்பின்மை, பாடசாலை இடைவிலகல், போதிய கல்வியறிவின்மை போன்றன காணப்படுவதுடன் குறித்த சிறுமிகள் கல்வியில் நாட்டமின்மை, சமூகப் பாகுபாடுகள், சமூகத் தனிமைப்படுத்தல், குடும்ப வன்முறை, சட்ட ரீதியான அறிவின்மை போன்ற சமூக ரீதியான சவால்களுக்கு முகங்கொடுப்பது ஆய்வின்மூலம் உறுதிசெய்யப்படுகிறது. ஆகவே இளவயது திருமணங்களை குறைப்பதற்கும் உளசவால்களை முகாமைசெய்வதற்கும் சமூக ஆதரவுகள் மற்றும் உளவளத்துணை, தொழில் பயிற்சிகள், கல்வி வாய்ப்புக்கள், வேலைவாய்ப்புக்கள், வாழ்வாதார உதவிகள் போன்றவற்றை வழங்குவதுடன், இளவயது திருமணம் தொடர்பான முறையான விழிப்புணர்வு செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக காணப்படுகின்றது.

திறவுச் சொற்கள்: இளவயது திருமணம், சிறுமிகள், சமூக ரீதியான சவால்கள்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் திருமணமான பெண்கள் குடும்பத்தில் எதிர்நோக்கும் சவால்கள்

தே.நிதர்சினி[1], த. தர்ஸன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

சமூகத்தில் முக்கிய பகுதிகளாக காணப்படும் பெண்கள் அவர்களது வாழ்வில் தினமும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எதிர்கொள்கின்றார்கள். இது பொருளாதார பின்னடைவுக்கும் குடும்ப மற்றும் சமூக உறவுகளின் இடர்பாடுகளுக்கும் உள்ளாகின்றார்கள். ஆகவே காரைநகர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஊரிக் கிராமத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் திருமணமான பெண்கள் குடும்பத்தில் எதிர்நோக்கும் சவால்களை மதிப்பிடுதலை நோக்கமாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வானது இணைந்த ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலாம் நிலை தரவுகளாக வினா கொத்து, நேர்காணல், நேரடி அவதானம் ஆகியனவும் இரண்டாம் நிலை தரவுகளாக பிரதேச செயலக மற்றும் மாவட்ட செயலக அறிக்கைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் இணையதளங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. பண்பு ரீதியான தகவல்கள் கருத்தியல் பகுப்பாய்விற்கும் அளவு சார் தரவுகள் புள்ளி விபரவியல் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டன. இவ் ஆய்வுப் பிரதேசத்தில் பெரும்பாலான திருமணமான பெண்கள் தொழிலினை மேற்கொள்ளாமல் இருப்பதினால் வருமானமின்மை, உறவினரிடம் நண்பர்களிடம் பேச முடியாத நிலை, வரதட்சனை கொடுமை, பாலியல் தொந்தரவுகள், குடும்ப விடயங்களில் கணவனின் தாய் தீர்மானம் எடுத்தல், கர்ப்ப காலத்தில் விட்டுச் செல்லுதல், கணவன் மட்டும் தொலைபேசி பாவித்தல், பிறந்த பிள்ளை தன்னுடைய பிள்ளை இல்லை என்று தந்தை பொய் சொல்லல், அன்றாட செயற்பாடுகளில் மாதவிடாய்காலங்களில் சமூகநியமங்களினால் ஓரங்கட்டப்படுதல் போன்ற சவால்களுக்கு முகம்கொடுப்பது ஆய்வுகளிலிருந்து வெளிப்படுகிறது. ஆகவே பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் திருமணமான பெண்கள் குடும்பத்தில் எதிர்கொள்கின்ற சவால்களை குறைப்பதற்காக உளவளத்துனை மற்றும் மருத்துவவசதிகள், வேலைவாய்ப்பு பயிற்சி திட்டங்கள், விழிப்புணர்வு கருத்துக்கள் வழங்குவதன் மூலம் சவால்களை குறைக்க முடியுமாக இருக்கும்.

திறவு சொற்கள்: பால்நிலை வன்முறை, திருமணமான பெண்கள், குடும்பம், சவால்கள்

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார சவால்கள்: அட்டாளைச்சேனை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

பாத்திமா சமா[1], தவராசா தர்ஸன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

Samafathima673@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இன்றைய சமூக சூழலில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகரித்துக் கொண்டிருப்பது முக்கியமான சமூகச் சவால்களாக காணப்படுகிறது. கணவன் இறந்ததனால், விவாகரத்து அல்லது வேலைவாய்ப்பு காரணமாக பெண்கள் குடும்பத் தலைவராக இருக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இதனால் அவர்கள் குடும்பத்தின் பொருளாதார பொறுப்புகளை தனியாக ஏற்று நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலைக்கு நிர்பந்திக்கப்படுகிறார்கள். இந்த நிலைமை அவர்கள் வாழ்க்கையில் வருமானமின்மை, பிள்ளைகளின் கல்விக்கான செலவுகளை மேற்கொள்ளல், கடன்களைப் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் போன்ற பொருளாதார ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாய்வு பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர் நோக்கும் பொருளாதார சவால்களை ஆராய்தலும் பொருத்தமான சமூகப்பணித்தலையீட்டை முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்வு இணைந்த ஆய்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் தரவுகள் எளிய எழுமாற்று மாதிரியை பயன்படுத்தி வினாக்கொத்து மூலமும் நேர்காணல் மூலமும் திரட்டப்பட்டது. பண்புசார் தரவுகள் கருத்தியல் பகுப்பாய்விற்குட்பட்டதுடன் அளவை சார் தரவுகள் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டது. பெரும்பாலான பெண்கள் வருமானக் குறைவு, வேலைவாய்ப்பின்மை, அதிகமான வாழ்க்கைச் செலவு, கடன் சுமை மற்றும் மருத்துவச் செலவுகள் போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது ஆய்வின் முடிவுகளிலிருந்து வெளிப்படுகிறது. ஆய்வின் பரிந்துரைகளாக,சமூகப்பணி இடையீட்டு நடவடிக்கைகள், வேலைவாய்ப்பு வாய்ப்புகள், பொருளாதார உதவி திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் போன்றவை பெண்தலைமைத்துவக்குடும்பங்களுக்கு மேற்கொள்வதன் மூலம் பொருளாதாரரீதியான சவால்களை குறைக்க இயலுமாக அமையும்.

திறவுச்சொற்கள்: பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், பொருளாதார சவால்கள், சமூகப்பணி இடையீடு

விவாகரத்தான பெண்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் போது எதிர்கொள்ளும் உளரீதியான சவால்கள்: ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவை மையப்படுத்திய ஓர் ஆய்வு.

அஜீத்தா[1], தவராசா தர்ஸன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ajithaariyarethnam@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

விவாகரத்தான பெண்கள் சமுதாயத்தில் தனித்துவமான இடத்தை வகிக்கின்றனர். அவர்களுக்கு குடும்ப வாழ்க்கையின் பொறுப்புகள், வேலைவாய்ப்பு தேவை, குழந்தைகளின் வளர்ச்சி, சமூக உறவுகள் ஆகியவை ஒன்றிணைந்து கடுமையான சவால்களை உருவாக்குகின்றன. குறிப்பாக, அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயற்சிக்கும் போது எதிர்கொள்ளும் உள ரீதியான சவால்கள் மிகவும் தீவிரமானவை மற்றும் தனிநபரின் உளநலத்தையும், சமூக வாழ்க்கையையும் பாதிக்கக்கூடியவை ஆகும். மட்டக்களப்பின் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவாகரத்தான பெண்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் போது எதிர்கொள்ளும் உளரீதியான சவால்களை கண்டறிதலும் பொருத்தமான இடையீட்டு திட்டங்களை பிரயோகிப்பதை நோக்கமாக கொண்டது. இவ் ஆய்வில் இணைந்த ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டதுடன் எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறை மூலம் 20 விவாகரத்தான பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்து முறை மூலம் தரவு திரட்டப்பட்டதுடன் 07 தொழில்வாண்மையானவர்களிடம் தீர்மானிக்கப்பட்ட மாதிரி எடுப்பு முறை மூலம் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டதுடன் அளவைசார் தரவுகள் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கும் பண்புசார் தரவுகள் கருத்தியல் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டது. ஆய்வின் மூலம், விவாகரத்தான பெண்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயற்சிக்கும் போது பலவிதமான உள ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது தெளிவாகத் உறுதியாவதுடன். தனிமை உணர்வு, சமூக ஒற்றுமை இல்லாமை, பிள்ளை பராமரிப்பு குறித்து ஏற்படும் கவலை மற்றும் எதிர்காலப் பாதுகாப்பு பற்றிய பதற்றம் போன்றவை அவர்கள் உளநலத்தில் மிகுந்த அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், வேலைவாய்ப்பு வாய்ப்புகள் இல்லாமை மற்றும் பொருளாதார ஆதரவு குறைவு காரணமாக உளரீதியான சவால்கள் அதிகமாக எதிர்கொள்கின்றனர். இவ்வாய்வின் பரிந்துரைகளாக, விவாகரத்தான பெண்களுக்கு சமூக ஆதரவுகள், ஆலோசனை மற்றும் உளநல மேம்பாட்டு சேவைகள், சமூக நலன்புரித்திட்டம், உளநல பயிற்சிகள் போன்றவற்றை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். எனவே விவாகரத்தான பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தொழில்வாண்மை தலையீடுகளை ஆய்வு செய்வதன் மூலம் இப்பிரச்சனையை குறைக்க கூடியதாக அமையும்.

திறவுச்சொற்கள்: விவாகரத்தான பெண்கள், வாழ்வாதார மேம்பாடு, உள ரீதியான சவால்கள்

பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டில் தொழில்வாண்மையான தலையீடுகளின் வகிபங்கு (சண்டிலிப்பாய் பிரதேச செயலத்துக்கு உட்பட்ட உயரப்புல கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வு)

கு. டிலோஷனா[1], தவராசா தர்ஸன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

சாதாரண குடும்பத்தலைவிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களிலிருந்து பெண்தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் வித்தியாசமானவையாக காணப்படுகின்றன. பெண்தலைமைத்துவ குடும்பங்கள் விரும்பியோ விரும்பாமலோ குடும்பப் பொறுப்பினை ஏற்க வேண்டிய நிர்ப்பந்ததிற்குள்ளாகின்றனர். ஆகவே பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் உள சமூக மற்றும் பொருளாதாரரீதியான சவால்களை எதிர்கொள்வதுடன் அவற்றை குறைப்பதற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அரச மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் தொழில்வாண்மை தலையீடுகளை மேற்கொள்ளுகின்றபோதும் அவற்றில் பொருத்தமற்ற வாழ்வாதாரம் வழங்குதல், பொருத்தமான வழிகாட்டலின்மை, சந்தைப்படுத்தல் வசதிகளின் மட்டுப்பாடு போன்ற பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்த வகையில் குறித்த கிராமத்தில் பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தொழில்வாண்மையான தலையீடுகளின் வகிபங்கை ஆராய்தலை நோக்காகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் பண்புசார் ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் பெண்தலைமைத்துவ குடும்பங்களுடன் பணியாற்றும் அரச மற்றும் அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள் நோக்கமாதிரி அடிப்படையில் 10 பேர் தெரிவுசெய்யப்பட்டு நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டதுடன் வாழ்வாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்தலைமைக் குடும்பங்கள் 20 பேர் தெரிவு செய்யப்பட்டு இரண்டு குவி மையக்குழு கலந்துரையாடல்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டது. அரச மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் தலையீடு தொடர்பாக இரண்டாம் நிலை தரவுகளை பெற்றுக்கொள்ள ஆண்டறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் பண்புசார் தரவு திரட்டல் மூலம் பெற்ற தரவுகள் கருத்தியல் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டது. இவ் ஆய்வின் கண்டுபிடிப்பாக அரச மற்றும் தன்னார்வ பணியாளர்கள் பெண்தலைமைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாழ்வாதாரம் வழங்கல், பயிற்சிகள் வழங்குதல், கடன் வசதிகள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள், மருத்துவ வசதிகள் போன்றன தொழில்வாண்மை தலையீடுகளின் வகிபங்குகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவ் ஆய்வின் பரிந்துரைகளாக தொழில்வாண்மையாளர்களின் சேவைகளை வினைத்திறனாக்க பயிற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்துவதுடன் சேவைகளை வழங்குவதற்கான ஏனைய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமெனவும் முன்வைக்கப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள் - பெண்தலைமைக் குடும்பங்கள், பேண்தகு வாழ்வாதாரம், தொழில்வாண்மையான தலையீடுகள்

அன்றாட வாழ்வில் திருநங்கைகள் எதிர் நோக்கும் உள, சமூக ரீதியான சவால்கள். (தேசிய திருநங்கைகள் அமைப்பை மையமாகக் கொண்ட விடயக் கற்கை ஆய்வு)

ர. சஞ்ஜீவ விக்ரம் [1], தவராசா தர்ஸன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வு சுருக்கம்

அன்றாட வாழ்வில் திருநங்கைகள் எதிர்நோக்கும் உள, சமூக ரீதியான சவால்கள் மிக முக்கியமான பிரச்சினையாகும். இலங்கையில் வாழும் திருநங்கைகள் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட நபர்களாக காணப்படுகின்றார்கள். பாலின அடையாளம் மற்றும் சமூக வர்க்க காரணங்களால் இவர்கள் அன்றாட வாழ்க்கையில் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள். எனவே அன்றாட வாழ்வில் திருநங்கைகள் எதிர்நோக்கும் உள, சமூக சவால்களை மதிப்பீடு செய்து அதை தீர்ப்பதற்கான பொருத்தமான சமூகப் பணி தலையீடுகளை முன்வைத்தலை பிரதான நோக்கமாகக் கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கொழும்பில் National transgender network அமைப்பில் உள்ள திருநங்கைகளில் ஆய்வாளனின் வசதிக்கேற்ப பண்பு சார் ஆய்வு முறை மூலம் நோக்க மாதிரி எடுப்பு முறையில் விடய கற்கை, பகுதி அளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மற்றும் மையக்குழு கலந்துரையாடல் அடிப்படையில் தரவுகள் திரட்டப்பட்டு கருத்தியல் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பாலான திருநங்கைகள் குடும்பம் மற்றும் சமூகங்களில் புறக்கணிக்கப்பட்டும், குடும்பங்களின் ஆதரவு இழந்தும், கல்வி மறுக்கப்பட்டும், சுயமரியாதை இழந்தும், தங்களின் பாலின அடையாளத்தை வெளிப்படுத்த முடியாமல் மற்றும் மன அழுத்தம், பயம், பதற்றம், தற்கொலை செய்யும் எண்ணம், வன்முறைகள் மற்றும் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தல் போன்ற சவால்களை எதிர்கொள்வது ஆய்வின் மூலம் உறுதியாகின்றது. இவ் ஆய்வின் பரிந்துரைகளாக பாலின அடையாளத்தை அங்கீகரித்தல், உளநல ஆதரவு நிலையங்களை உருவாக்குதல், சமூக விழிப்புணர்வு அமைப்புக்களை உருவாக்குதல், வேலை மற்றும் கல்வி போன்றவற்றில் இட ஒதுக்கீட்டை வழங்குதல் மற்றும் ஊடக ஒழுங்கு சட்டங்களை உருவாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டியது அவசியமென முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே திருநங்கைகள் எதிர்நோக்கும் உள, சமூக ரீதியான சவால்களை குறைப்பதற்கு நடைமுறையில் காணப்படும் தொழில்வாண்மையான தலையீடுகளின் வினைத்திறனை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாக காணப்படுகிறது.

திறவுச் சொற்கள் - திருநங்கைகள், உள சவால்கள், சமூக சவால்கள்

மாதவிடாய் காலங்களில் க.பொ.த சாதாரணதர மாணவிகள் எதிர்கொள்ளும் உளரீதியான சவால்கள்

இ. ஸங்கவி[1], தவராசா தர்ஸன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வு சுருக்கம்

மாதவிடாய் என்பது கட்டிளமைப் பருவப் பெண்களின் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத உடலியல் நிகழ்வாகும். எனினும் இது பல்வேறு உளவியல், கல்வி மற்றும் சமூக சவால்களை உருவாக்குகின்றது. குறிப்பாக கா.பொ.த சாதாரணதர மாணவிகள் கல்வியினை மேற்கொள்ளும் போது எதிர்கொள்ளும் உளரீதியான சவால்கள் மிகவும் தீவிரமானவையென்பதுடன் தனிநபரின் மனநலத்தையும் சமூக வாழ்க்கையையும் பாதிக்கக் கூடியவையாகும். இவ் ஆய்வு மாதவிடாய் காலத்தில் க.பொ.த சாதாரணதர மாணவிகள் எதிர்கொள்ளும் உளவியல் சவால்களை கண்டறிந்து பொருத்தமான சமூகப்பணித் தலையீட்டினை முன்வைப்பதற்காக யா/இராமநாதன் கல்லூரியை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் இணைந்த ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் எளிய எழுமாற்று மாதிரி மூலம் கா.பொ.த சாதாரணதர மாணவிகள் மாதவிடாய் காலத்தில் எதிர்கொள்ளும் உளசவால்கள், அவற்றின் தாக்கங்கள், அக்காலத்தில் அவர்கள் பயன்படுத்தும் உத்திகள் மற்றும் தேவையான சமூகப்பணி தலையீடுகள் குறித்த தகவல்களை சேகரிப்பதற்காக 20 மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்தின் மூலமும் குறித்த மாணவிகளின் பெற்றோர் மற்றும் தொழில்வாண்மையாளர்கள் போன்றோரிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் கருத்தியல் பகுப்பாய்விற்கும் அளவை சார் தரவுகள் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டன. இவ் ஆய்வின் கண்டுபிடிப்பாக மாணவிகள் பெரும்பாலும் மன அழுத்தம், கவலை, எரிச்சல், தனிமை, தாழ்வு உணர்வு போன்ற உளச்சவால்கள் குறித்த ஆய்வின்மூலம் வெளிப்படுத்தப்பட்டன. இச்சவால்கள் கல்வி செயற்திறன், பாடசாலை வருகை மற்றும் சமூக உறவுகள் போன்றவற்றைப் பாதித்திருந்தன. குறித்த சவால்களை கையாள்வதற்கு மாணவிகள் பெரும்பாலும் நண்பர்கள் மற்றும் குடும்பத்துடன் உரையாடல் ஓய்வெடுப்பது பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவற்றை உத்திகளாக கையாண்டிருந்தனர். ஆகவே குறித்த சவால்களை வெற்றிகொள்வதற்கு மாணவிகளுக்கு உளவளத்துணை வழங்குதல், ஆதரவு குழு உருவாக்கம் மற்றும் மாதவிடாய் தொடர்பான விழிப்புணர்வு பயிற்சிகள் போன்றவை அவசியம் என்பதை இவ் ஆய்வின் பரிந்துரையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்:- மாதவிடாய்காலம், கா.பொ.த சாதாரண தர மாணவிகள், உளவியல் சவால்கள்

விதவைப்பெண்கள் குடும்பப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதனால் எதிர்கொள்ளும் சமூகச் சவால்கள் (கஹட்டகஸ்டிகிலிய பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு)

உ.பாத்திமா பாரிஷா[1], தவராசா தர்ஸன்[2]

சமூகப்பணித்துறை, தேசிய சமூக, அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வு சுருக்கம்

விதவைப்பெண்கள் தங்களது கணவரது இறப்பிற்குப் பின்னர் தங்களது குடும்பப் பொறுப்புக்களை சுமக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகின்றனர். இதனால் குடும்பத்தில் இரண்டு நபர்களுடைய வாழ்க்கைச்சுமையை ஒருவர் சுமக்கவேண்டிய கட்டாயத்திற்குட்படுவதுடன் சமூகத்தின் நியமங்கள் மற்றும் விழுமியங்களுக்கு வாழவேண்டிய நிர்ப்பந்ததத்திற்குள்ளாகின்றனர். இதனால் அதிகவேலைப்பளு குடும்பக்கஸ்டம் சமூகத்தின் இழிவுப்பேச்சு போன்ற சவால்களுக்குள்ளாகின்றனர். ஆகவே விதவைப் பெண்கள் குடும்பப்பொறுப்பை சுமப்பதனால் எதிர்நோக்குகின்ற சமூகச்சவால்களை ஆராய்தலும் சமூகப்பணி இடையீட்டினை முன்வைப்பதனை நோக்கமாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கு பண்புசார் ஆய்வுமுறை தெரிவுசெய்யப்பட்டதுடன் நோக்கமாதிரி அடிப்படையில் நேர்காணல் மூலம் 20 விதவைப்பெண்களிடமும் அவர்களிடம் நேரடியாகப்பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகமட்ட அமைப்பு பிரதிநிதிகள் 08 பேரிடமும் பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டு கருத்தியல் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டது. ஆய்வின் கண்டுபிடிப்புக்களாக விதவைப்பெண்கள் குடும்பப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதனால் அடிக்கடி சமூகக்களங்கம், தனிமைப்படுத்தப்படல், நிதி ஏற்றதாழ்வுகள் மற்றும் சமூக ஆதரவின்மை போன்ற சமூகச்சவால்களை எதிர்கொள்வது உறுதியாகிறது. ஆய்வின் பரிந்துரைகளாக விதவைப்பெண்களின் நிலையை மேம்படுத்த கொள்கை உருவாக்கம் மற்றும் அவற்றை அமுல்படுத்துவதில் காணப்படும் தடைகளை நீக்கி வினைத்திறனை மேம்படுத்த வேண்டுமென முன்வைக்கப்பட்டுள்ளதுடன் விதவைப்பெண்களின் சமூகச்சவால்களை இழிவளவாக்குவதற்கு நடைமுறையில் காணப்படும் தலையீடுகள் தொடர்பாக ஆய்வுசெய்யப்படுதல் அவசியமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள் : விதவைப்பெண்கள், குடும்பப்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளல், சமூகச்சவால்கள்.

“இலங்கை தமிழ் சமூகத்தில் பால்நிலை ரீதியான முற்கற்பிதங்களை வலியுறுத்துவதில் இந்திய ஊடகங்களின் செல்வாக்கு”

செல்வராஜா தனுஷா

சமூகப்பணித்துறை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இலங்கை

ஆய்வு சுருக்கம்

ஊடகம் என்பது சமூகத்தின் பிரதிபலிப்பாகும். இது சமூகத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளை உள்ளடக்குகின்றது. குறிப்பாக பால்நிலை ரீதியான முற்கற்பிதங்களுடாக ஆண், பெண் பற்றிய பாரம்பரிய தவறான எண்ணங்களை காட்சியளிப்பதோடு, இவை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், தொடர்கதைகள் மற்றும் விளம்பரங்களில் பால்நிலை வகிப்பங்குகள் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதனை நாம் இன்று காணலாம். இலங்கையில் உள்ள தமிழ் ஊடகங்களிலும் இதன் பிரதிபலிப்பை காணக்கூடியதாக உள்ளது.

இந்த ஆய்வின் நோக்கமானது இந்திய ஊடகங்களின் மூலமாக வெளிப்படுத்தப்படும் பால்நிலை ரீதியான முற்கற்பிதங்கள் மூலம் இலங்கையில் உள்ள ஆண்.்.பெண் என்போரிடையே எவ்வாறான சமூக நிலை எண்ணங்களை ஏற்படுத்துகின்றது, என்பதனை ஆராய்வதாக அமைகின்றது.

இந்த ஆய்வானது பண்பு சார் ஆய்வு முறையை கொண்டுள்ளது. பண்பு சார் ஆய்வுக்கான தகவல்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், தொடர்கதைகள் மற்றும் விளம்பரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இந்திய தொலைக்காட்சிகளான சன் டிவி, விஜய் டிவி, ஜீ தமிழ் ஒளிபரப்பாகும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் 03 விளம்பரங்கள் 10, தொடர்கதைகள் 06 என்பன ஆய்வுக்காக தரவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த ஆய்வானது உள்ளடக்க பகுப்பாய்வு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் பிரதான கண்டுபிடிப்புகளாக, மேற்குறிப்பிட்ட தொலைக்காட்சி நாடகங்கள், விளம்பரங்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்பன வீட்டு வேலைக்கு பெண்களை சுருக்கும் வகையில் சித்தரிக்கப்படுகின்றன. அவர்களின் தொழில், இலட்சியம் தனிப்பட்ட அபிலாசைகளை குறைவாகவே காட்டப்படுகின்றது. கவர்ச்சிகரமாக பெண்கள் பெரும்பாலும் அவர்களின் உடல் தோற்றத்தில் முக்கியத்துவம் கொடுப்பதாக வர்ணிக்கின்றனர். இது சமூகத்தில் பெண்கள் அழகாக இருக்கு வேண்டும் என்ற அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் சித்தரிக்கப்படுகின்றனர். பெண்கள் உணர்ச்சி பூர்வமானவர்களாகவும் பலவீனமானவர்களாகவும் பெண்களுக்கு சுயமாக சிந்திக்கும் திறனற்றவர்களாகவும் ஆண்களின் பாதுகாப்பு தேவைப்படுபவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். இது பெண்களின் திறமைகள் அபிலாசைகளை குறைத்து மதிப்பிட வழிவகுக்கின்றது. இது பெண்கள் மீது நிலவுகின்ற சமூக பாகுபாட்டை மேலும் வலுப்படுத்துகின்றது.

எப்பொழுதும் ஆண்கள் வலிமையானவராகவும் வீரமானவர்களாகவும் எல்லா வகையான சவாலையும் எதிர்கொள்ள கூடியவர் என சித்தரிக்கப்படுகின்றனர். குடும்பத்தின் நிதி சுமையை ஏற்பவராகவும், குடும்பத்தின் முக்கிய முடிவுகளை எடுப்பவராகவும் காட்டப்படுகின்றது. ஆண்கள் எப்போதும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த கூடாது எப்பொழுதும் உறுதியானவராக இருப்பவராக ஊடகங்கள் முன்வைக்கின்றனர். தென்னிந்திய ஊடகங்களில் குழந்தைகள் மீது ஆதிக்கம் செலுத்துபவராகவும் அவர்களின் முடிவுகளை புறக்கணிப்பவராக சித்தரிக்கின்றனர். ஆண்கள் மீது தேவையற்ற மன அழுத்தத்தை உருவாக்குகின்றது. ஆண்களின் ஆதிக்கம் மனப்பான்மை இது ஊக்குவிக்கின்றது.

முடிவாக, இந்திய ஊடகங்கள் மூலமாக இலங்கையில் பால்நிலை ரீதியாக முற்கற்பித்தல் தொடர்வதை அவதானிக்க முடிகின்றது. இவை பாரம்பரிய பால்நிலை அழுத்தங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைகின்றது. இலங்கையில் சில முன்னேற்றங்கள் இருந்தாலும் முழுமையாக சமத்துவ காட்சிப்படுத்தல் இல்லாத தன்மையும் இந்திய ஊடகங்களின் தழுவும்

வகையில் காணப்படுகின்றன. இளம் தலைமுறையினரும் விளம்பர நிறுவனங்கள் மாற்று சிந்தனையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும். இலங்கையிலும் இந்தியாவிலும் தணிக்கை குழுக்கள் பால்நிலை கூர்வுணர்வு உள்ளவர்களாக மாறி இவற்றை அடையாளப்படுத்த வேண்டும்.

திறவுச்சொற்கள் : ஊடகம், பால்நிலை, மன அழுத்தம், தணிக்கை குழு

Presentation Guild Line

1. General Information

Presentation Format: Oral Presentation / Poster Presentation (as specified by the conference organizers).

Presentation Time: Typically 10-15 minutes, followed by a 5-minute Q&A session.

Languages: Sinhala/ Tamil/ English

Submission of Materials: Presenters must submit slides/posters at least 48 hours before the scheduled session.

2. Oral Presentation Guild Line

A. Structure of the Presentation

1. Title Slide
   - Title of the research
   - Presenter's name and affiliation
   - Conference name and date
2. Introduction (1-2 minutes)
   - Brief background and research problem
   - Objectives of the study
   - Research questions or hypotheses
3. Methodology (2-3 minutes)
   - Study design (qualitative, quantitative, or mixed methods)
   - Data collection and analysis techniques
4. Findings (3-4 minutes)
   - Present key results using charts, graphs, or tables
   - Provide a clear explanation of the findings
5. Discussion (2-3 minutes)
   - Interpretation of results
   - Implications and significance of the research
6. Conclusion (1-2 minutes)
   - Summary of key findings
   - Recommendations or future research directions
   - Interact with the audience engage and answer questions effectively.
7. Q&A Session (5 minutes)

3. Be prepared to answer questions clearly and concisely

B. Slide Preparation

Use clear, readable fonts (e.g., Iskolapotha, Bamini, Times New Roman).
Keep text brief and to the point (bullet points instead of long paragraphs).
Include high-quality images, graphs, or tables to support your arguments.
Maintain contrast between text and background for readability.

C. Presentation Delivery

Practice beforehand to stay within the time limit.
Speak clearly and confidently; avoid reading directly from slides.
Maintain eye contact with the audience.
Use appropriate gestures and voice modulation to emphasize key points.
Engage with the audience during the Q&A session.

4. Technical Requirements & Logistics

Arrive at the venue at least 30 minutes before your session.
Bring a backup of your presentation on a USB drive and cloud storage.
Check audio-visual equipment compatibility beforehand.
Dress in professional or business casual attire.

5. Ethical Considerations

Give proper credit to all referenced works.
Ensure plagiarism-free content.
Maintain research integrity and professionalism in all discussions.

Final Tips for a Successful Presentation

Rehearse multiple times before the event.
Be mindful of time and keep track of each section.
Stay confident, calm, and professional during the presentation.

Formatting Guidelines for Camera-Ready Abstract

Page Layout

Paper Size: A4 (8.27 × 11.69 inches) or as per conference/journal specifications.

Margins: 1-inch (2.54 cm) on all sides.

Columns: Single-column (for abstract submissions); double-column (if required by the conference).

Line Spacing: 1.5 or double-spaced for readability.

Font and Text Formatting

Title: Bold, 14pt, centered.

Authors' Names & Affiliations: Centered, 12pt font (affiliations in italics).

Email Addresses: 10pt font, italicized.

Abstract Text: Justified, 12pt font, 1.15 line space (typically within 250-300 words). • **Keywords**:Italicized, 10pt font, Italicized, separated by commas, Alphabetical Order

Citation & References

Follow APA 7th edition or the specific citation format requested.

Ensure all references are cited in-text and listed in the reference section.

Final Paper Submission Guidelines (Student Journal of Social Work-2025)

Structure of the Full Paper

Title Page: Title, Author(s), Affiliations, Corresponding Author Email

Abstract & Keywords (as formatted above)

Introduction: Background, research objectives, significance of the study

Literature Review: Summary of related studies, theoretical framework

Methodology: Research design, data collection techniques, sample size

Findings & Discussion: Key results with supporting tables/graphs

Conclusion & Recommendations: Summary, policy implications, future research directions

References: Properly formatted bibliography

Figure & Table Guidelines

Number tables/figures sequentially (e.g., Table 1, Figure 2).

Provide clear captions below figures and above tables.

Use high-resolution images (300 dpi) if including charts or figures.

Final Checks before Submission

Proofread for grammar, spelling, and formatting errors.

Ensure in-text citations match the reference list.

Convert the final version to PDF format (if required).

Follow any file naming conventions specified (e.g.,"AuthorName_Conference2025.pdf").

Submit before the deadline and keep a backup copy. (**30.07.2025**)

The Impact of Gender on Leadership Styles and Organizational Performance

[Correspondent Author Name][1]

Co-Authors Name[2]

Department or Faculty, Your University or Institution, City.

E- Mail: [Correspondent Author Email]


Abstract

This study examines the multifaceted relationship between gender, leadership styles, and organizational performance. Drawing upon a quantitative analysis of data from 150 leaders (75 male, 75 female) across various industries, this research investigates whether and how gender influences the adoption of specific leadership styles, such as transformational, transactional, and laissez-faire leadership. The study also assesses the subsequent impact of these gender-influenced leadership approaches on key organizational performance metrics, including employee satisfaction, productivity, and innovation. Our findings reveal a significant difference in leadership style preferences between genders. Female leaders were found to be more inclined towards a transformational leadership style, characterized by inspiring and empowering employees, fostering collaboration, and promoting a positive work environment. In contrast, male leaders exhibited a higher propensity for transactional leadership, which focuses on clear performance expectations, rewards, and corrective actions. The analysis further suggests a positive correlation between transformational leadership and improved organizational performance metrics, particularly in terms of employee morale and team innovation. These results underscore the importance of recognizing and valuing diverse leadership approaches within an organization. The study concludes that promoting gender diversity in leadership roles is not only an ethical imperative but also a strategic advantage that can enhance organizational effectiveness and adaptability in the modern business landscape. The implications of this research extend to talent management, leadership development programs, and organizational policies aimed at creating a more inclusive and high-performing work culture.

Keywords: ***Gender, Leadership, Organizational Performance, Transformational Leadership, Transactional Leadership***

Sponsors and Partners

Sun Match Company (Pvt) Ltd



Contact Information

Mrs. K.C.K. de Thabrew (Lecturer)
Director
chamari@nisd.ac.lk
0751822341

Gihani Pieris,
0763757803
Conference Secretary,
Gender Club Organizer,
Centre for Gender Studies
National Institute of Social Development.

Centre for Gender Studies
National Institute of Social Development.
Address:
Centre for Gender Studies,
National Institute of Social Development
Director : 0751822341
Office : +94112882506/7
Mail: cgs@nisd.ac.lk

Acknowledgements

The Organizing Committee of the National Conference on Gender Studies (NCGS-2025), organized by the Centre for Gender Studies at the National Institute of Social Development (NISD), wishes to extend its deepest gratitude to all those who contributed to the successful realization of this important academic event.

We are profoundly thankful to the Director General, academic staff, and administrative team of NISD for their continuous encouragement, guidance, and institutional support throughout the planning and implementation stages of this conference. Their commitment to fostering scholarly dialogue and advancing the field of gender studies has been invaluable.

Our heartfelt appreciation goes to the keynote speakers, plenary presenters, and session chairs whose expertise, dedication, and thought-provoking contributions have enriched the academic quality of this event. We also extend special thanks to the reviewers, editorial committee, and academic board for their tireless efforts in reviewing abstracts and papers, ensuring the academic rigor of the proceedings.

We gratefully acknowledge the invaluable contributions of researchers, practitioners, activists, and students, both from Sri Lanka and beyond, whose participation has created a vibrant and meaningful space for interdisciplinary dialogue. Their research, ideas, and critical insights have laid the foundation for impactful discussions that will extend far beyond the conference.

A special word of thanks is due to the organizing committee members, coordinators, and volunteers, whose dedication, attention to detail, and behind-the-scenes efforts ensured the smooth execution of the event. Without their commitment, this conference would not have been possible.

We also extend our appreciation to all partner institutions, collaborators, and well-wishers who supported this endeavor in various ways through resources, knowledge-sharing, and encouragement.

Finally, we acknowledge with gratitude every participant who has contributed to the spirit of this conference. It is our sincere hope that the knowledge shared, networks built, and collaborations initiated during NCGS-2025 will serve as a catalyst for advancing gender equality, promoting social justice, and inspiring future research and practice.

BEYOND BOUNDARIES

Navigating the Complexities of Gender Dynamics



NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT

LIYANAGEMULLA, SEEDUWA, SRI LANKA

TEL - 0112 882 506

E-mail - info@nisd.ac.lk WEB - www.nisd.ac.lk